மௌனம் பேசும்

புன்னகை ஆயுதமும்

முஸ்டீன

Seikh Ismail Memorial Publication

செய்ஹ் இஸ்மாயில் ஞாபகார்த்த பதிப்பகம்

River Bank Road
Kawatthamunai
Vahanery - 30424, Sri Lanka

மௌனப் போரும் புன்னகை ஆயுதமும்: முஸ்டீன் - கவிதைகள் - பக்கங்கள் 103 அளவு : கிரவுன் பி 6 - விலை : ரூபாய் 200 - முதல் பதிப்பு 2012 ஏப்ரல் 29 பிரதிகள் 1000 - வெளியீடு: சிம் பப்ளிகேஷன் - பக்க வடிவமைப்பு: தீபா அட்டைப்படம்: சுமையா - அச்சகம் : ஏ.ஜே. பிரின்ட்ஸ் தெஹிவளை, இலங்கை- பதிப்புரிமை : சிம் பப்ளிகேஷன் - வெளியீட்டு நாள்: 2012 மே 17.

Mounapporum Punnakai Aayuthamum : Musdeen - Poems - Pages : 103 Size : Crown B 6 - Prize : 200 Rs - First Edition 2012 April 29 - 1000 Copies Publishing : SIM Publication - River Bank Road, Kawatthamunai, Vahanery 30424, Sri Lanka - Mobile : +94 777 617 227 - www.simproduction2002.blogspot.com email : simproduction2002@gmail.com - Lay out : Theeba - Cover Design : Sumaiya - Printers : A.J. Prints, Dehiwela, Sri Lanka - Copyright : SIM Publication - Launch : 2012 May 17 ISBN 978-955-1447-01-4.

போராலும்,

போரிலும்,

மண்ணில்

மாவீரம் விதைத்த

அனைத்துயிர்கட்கும்

இது சமர்ப்பணம்.

– முஸ்டீன் –

1985 ஏப்ரல் 29 விடுதலைப் போராளிகளால் படுகொலை செய்யப்பட்ட எனது தந்தை செய்ஹ் இஸ்மாயில் அவர்களின் நினைவாக...

2012 ஏப்ரல் 29

ஒரு நிமிடம் நிதானித்து

மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சிம் - பப்ளிகேஷனின் நான்காவது வெளியீடு

வருகிறது. பொருளாதாரத்தின் இறுக்கம் சிந்தனைகளையும், லட்சியங்களையும் ஆறாண்டுகள் பின்னோக்கித் தூக்கியெறிந்துவிட்டது. அதனால் நடைமுறையில் செயற்பாடுகள் கேள்விக்குறியாகிவிட்டன. வெளியீட்டுப் பணிகள் இனி முடக்கமின்றித் தொடரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட செய்ஹ் இஸ்மாயீல் ஞபகார்த்த தயாரிப்பகத்தின் ஒரு கிளையாக 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது தான் செய்ஹ் இஸ்மாயீல் ஞாபகார்த்த பதிப்பகம். ஏ.எம். ஸமீமின் "அலங்கார வேலைக்கு அற்புத வடிவங்கள்" எனும் நூலுடன் தொடங்கிய பயணம். இடையே 2009 இல் தீ நிழல் திரைப்படத்திற்கான ஒரு விஷேட இதழையும் 2010 இல் வடக்கு முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட 20 ஆவது வருட நிறைவை முன்னிட்டு "1990 மனிதப் பேரவலம்" எனும் விஷேட ஆய்வு இதழையும் வெளியிட்டதோடு சரி. வேறு

புத்தகங்கள் எதையும் பதிப்பிக்க முடியவில்லை. கல்குடா முஸ்லிம்களின் வரலாறு எனும் அஷ்ஷெய்ஹ் ஜுனைதீன் அவர்களின் நூலையும் முஸ்டீனின் இரண்டாவது மரணமும் மூன்றாம் சாமத்துப் பேயும் எனும் கவிதைத் தொகுதியையும் வெளியிட எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன.

தோற்கடித்த இரு பெரும் எதிரிகள் ஒன்று பொருளாதாரம் அடுத்தது வேறு வேலைகள் மீதான பலு. இடையே நமது சினிமாவுக்கான ஒரு காலாண்டு சஞ்சிகையை வெளியிட நண்பர் மாரி மகேந்திரனுடன் முஸ்டீன் இணைந்து எடுத்த நடவடிக்கைகள்: இதழாக்கப் பணிகளை மகேந்திரனும், வடிவமைப்பை முஹமட் பெரோஸ்ம் வெளியீட்டை சிம்- பப்ளிகேஷனும் செய்வதாக இருந்தது. 2008 ல் தொடங்கி 2010ல் தான் முதலாவது இதழின் வேலைகளை முடிக்க முடிந்தது. ஆயினும் துரதிஷ்டம் மாதிரிப் பிரதியோடு அந்த முதல் இதழ் கிடப்பில் கிடக்கிறது. அதையும் அப்படியே விட்டுவிடும் எண்ணம் இல்லை.

இலங்கையின் தமிழ் சினிமாவை மீண்டும்

தூக்கி நிறுத்துவோம். என்ற உயரிய லட்சியத்துடனும் நல்ல சினிமா ரசனைக்கான ஒரு துணையாகவும் அது அமைய வேண்டும் எனும் எமது எதிர்பார்ப்புகளைச் சுமந்த அந்தப் பெறுமதியான முயற்சி நிச்சயம் வெற்றி பெறும் எனும் நம்பிக்கை இருக்கிறது. இந்த சிந்தனையோடு உள்ளவர்கள் எம்முடன் கைகோர்க்க இவ்வெளிப்படுத்துகை துணை செய்யக்கூடும்.

ஒரு பத்திரிகைக் கனவுடன் தொடங்கிய எமது பயணம் இன்னும் அதை அடையவில்லை. இப்படியே இடையில் தொக்கி நிற்கும் கனவுகள் எப்போதுமே அப்படியிருக்கப் போவதில்லை. விரைவில் நிறைய மாற்றங்களின் அடித்தளமாக சிம் - பப்ளிகேஷன் இருக்கும் என்ற இறைவன் மீதான அழுத்தமான நம்பிக்கையோடு...

மௌனப்போரும் புன்னகை ஆயுதமும் எனும் கவிதைத் தொகுதியினை எமது நான்காவது வெளியீடாக உங்கள் முன் அளிக்கிறோம்.

உதவிப் பணிப்பாளர் செய்ஹ் இஸ்மாயில் ஞாபகார்த்த

ஓர் அஸ்தமனத்திற்குப் பின்னால்

பெரிதாய்ச் சொல்லி விடுவதற்கு ஒன்றுமில்லை என் மனதில் தோன்றியவைகளுக்கு ஏதோவோர் விதத்தில் எழுத்து வடிவம் கொடுத்திருக்கிறேன். அவை கவிதைகள் என்று நான் நினைத்துக் கொள்கின்றேன். அப்படி நினைத்துக் கொண்டமைக்காக தமிழ் இலக்கிய உலகிடம் மன்னிப்புக் கோருகின்றேன். எனது தேடலின் அறுவடைகளாய்ச் சேமிக்கப்பட்ட யதார்த்தங்களின் பின்புலத்தில் நின்றுதான் எழுதியிருக்கின்றேன். எழுத வேண்டும் என்று தோன்றியது. காலம் எழுத வைத்தது.

தீவிரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அவசர காலச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் இருந்த அனுபவம் எனக்கும் இருக்கிறது.

அதுவும் யுத்தம் முடிவுற்ற தருவாயில்.
பல மாதங்கள் சிறைச்சாலையில், அந்தக் காலப் பிரிவில் செதுக்கப்பட்டவைதான் இந்த எழுத்துக்கள். சொல்ல வேண்டிய அனைத்தையும் சொல்லி விட்டேன் என்று தான் நினைக்கின்றேன். எதைப் பற்றிய அச்சமும் எனக்கில்லை.

பேனையும் ஒரு போர்க்கருவிதான். அதி உன்னத பயன்பாட்டை அடையவும் பெரும் போரை வழிநடாத்தவும் எனக்கான ஆயுதமாக அதையே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றேன். சாகத் துணிந்த பின்னரான எனது தெரிவு இதுவொன்றுதான். சிறைச்சாலையில் நான் அனுபவித்த வேதனைகள் சொல்லி மாளாது. அவற்றை அவ்வளவு எளிதில் எழுத்தில் வடித்திடவும் முடியாது. எதுவாயினும் எனக்கு நிறைய எழுதுவதற்கு அவகாசம் கிடைத்தது அங்குதான். அதனால் நஷ்டமேதுமில்லை. பொலிஸாருக்கு நன்றிகள்.

பேசிப்பேசி காலங்கடத்தும் மனிதர்களிலிருந்து கொஞ்சமேனும் வித்தியாசமாக

இருக்க முயற்சித்ததன் விளைவுகள் மிகவும் அதீதமானவை. எனக்கான செயற்பாட்டுத் தளத்தை நானே தீர்மானிக்கின்றேன். அதுபோலத்தான் எனது எழுத்துக்களும். எல்லாக் கட்டமைப்புகளையும் கடந்து அது என்னுள்ளால் பயணிப்பவை எனது உணர்வுகளை ஊடறுத்து வெளிவருபவை. சமரசம் செய்து கொள்ள மறுப்பவை. எனது எழுத்துக்களின் தரம் பற்றி நான் கவலைப்படவில்லை. அது காலம் செய்யும் பணி. நான் அலட்டிக கொள்ளத் தேவையில்லாத ஒன்று.

மௌனமாக நடந்து கொண்டிருக்கும் பல்லாயிரம் போர்களில் புன்னகை பேராயுதமாய் பயன்படுத்தப்படும் தருணங்களில் எனது தொகுதி வெளிவருகிறது. போர் எனின் இழப்பு நிச்சயம். புன்னகை ஆயுதம் அது எதையெல்லாம் சிதைக்குமோ தெரியவில்லை. பொறுத்திருந்து காண்போம், கணிப்போம்.

இரண்டாவது மரணமும் மூன்றாம் சாமத்துப் பேயும் என்பது எனது முதலாவது கவிதைத்

தொகுதி. அது இன்னும் வெளிவரவில்லை. அவை 2002 கள் தொடக்கம் 2007 வரை எழுதப்பட்டவை. போர்க்காலக் கவிதைகள். இறைவன் நாடினால் அதுவும் வெளிவரும். எனது முதல் தொகுதியை வெளியிடும் பணிகள் தாமதித்துக்கொண்டே போயின. அந்தத் தாமதத்தினை இந்தத் தொகுதி சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்திக் கொள்கிறது.

நான் எழுதிய முதல் கவிதை பிரசுரமாகவில்லை. ஆனால் இரண்டாவது கவிதை 1998 இல் தினகரனில் பிரசுரமானது. எம்.எச்.எம்.ஷம்ஸ் முதலாவது கவிதையை தினகரன் புதுப்புனல் பகுதியில் பிரசுரிக்க முடியாமைக்காக

வருத்தம் தெரிவித்தார். அன்றோடு பத்திரிகைக்கு எழுதுவதை விட்டுவிட்டேன். எப்போதும் இரண்டுக்குத்தான் மதிப்பு போல எனது வாழ்வில். பின்னர் ஒரு கவிதை 2003 ஜூனில் "எங்கள் தேசம்" பத்திரிகையில் பிரசுரமானது. வாழைச்சேனை முஸ்லிம் கடைகள் விடுதலைப்புலிகளால் 2002 ஜூனில்

எரிக்கப்பட்டதை மையப்படுத்தி ஒரு வருட நினைவாக எழுதப்பட்ட கவிதை அது. அதிலும் கடைசி வரியை நீக் கிவிட் டு பிரசுரித்திருந்தார்கள். அதனால் பொல்லாத கோபம் வந்தது. பின்னர் பத்திரிகைகளுக்கு எழுதும் ஆர்வம் அறவே இல்லாததால் எழுதியவைகள் எதையும் பத்திரிகைகளுக்கு அனுப்பவுமில்லை. அவைகள் யாரையும் சென்றடையவுமில்லை.

அணிந்துரை, ஆசியுரை, வாழ்த்துரை மதிப்புரை

என்று எதற்குப் பின்னாலும் என்னால் அலையமுடியவில்லை. ஒரு தொகுதியை அவர்களிடம் கொடுத்துவிட்டு எழுதி விட்டீர்களா? எப்போது கிடைக்கும்? என்று விசாரித்து விசாரித்து காத்திருந்து சலிப்படையும் அனுபவம் எனக்கும் வேண்டாம் என்பதால் தவிர்ந்து கொள்கிறேன். இன்னும் அவர்களின் உரைகள் கிடைக்கவில்லை. அவைகளை அவர்கள் தரும்போது தரட்டும். அடுத்த பதிப் பிலேனும் சேர்த் துக் கொள் வோம். சிலர் குறிப்பெழுதப் பயந்து போனார்கள். பின்னும் ஏன்

அதற்காகக் காத்திருப்பானேன்.

ஆனால் நிச்சயம் இத்தொகுதி குறித்த கருத்துக்களை முழுமையாக பதிவு செய்யும் எண்ணம் இருக்கிறது. இறைவன் துணையில் அதுவும் ஒரு நாள் கைகூடும். அப்போது தைரியமானதும், உண்மையான பற்றுள்ளதுமான உயிர்ப்பான உணர்வுள்ளவர்களுமான மனிதர்கள் பற்றி அறிந்து கொள்ள ஒரு சின்ன விளக்கக் குறிப்பாக அது இருக்கும்.

காத்திருந்து காத்திருந்து காலத்தை வீணடித்து வெளிவராமல் தாமதித்துப் போன "இரண்டாவது மரணமும், மூன்றாவது சாமத்துப் பேயும்" தொகுதியின் கவலைக்கிடம் இதற்கும் வரவேண்டாம் என்பதால் மொட்டையாக வெளிவருகிறது என்று வைத்துக் கொள்வோம்.

நிறையப் பேருக்கு நன்றி சொல்ல வேண்டும். சில படங்கள் வரைந்து தந்த ஓவியர் மன்சூர், தட்டச்சு மற்றும் பக்கவடிவமைப்பு செய்த தீபா கிருஷ்ணசாமி

மற்றும் அட்டைப்படம் வடிவமைத்த சுமையா ஜின்னாஹ், ஒப்பு நோக்கிய எழுத்தாளர் ராணி சீதரன் மற்றும் இதனை அழகிய முறையில் அச்சிட்ட அச்சக உரிமையாளர் சகோதரர் மர்சூக் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இன்னும் ஒரேயொரு விஷேட நன்றி மீதமிருக்கிறது, அது என்னுடைய அன்பு மனைவி ஷாமிலாவுக்குரியது. எனது அனைத்துப் பணிகளிலும் முழுமையாக ஒத்துழைப்பு நல்கி தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் ஓயாது செய்து அலுப்பின்றி எப்போதும் ஒரு புன்னகையால் அனைத்தையும் எதிர்கொண்டு இந்தப் புத்தகம் அச்சுக்குப் போகும்வரை பம்பரமாக நின்ற அவளுக்கு இந்நன்றி போதாதுதான்.

இன்னுமொரு படைப்புடனும் ஒரு நீண்ட குறிப்புடனும் எல்லோரையும் மீண்டும் சந்திப்பேன் என்ற நம்பிக்கையோடு...

முஸ்டீன்

2012.04.29

தரிசனத்திற்காய்

01. மீண்டும் உன் வருகைக்காக
02. புதிதாய்ப் புறப்படுதல்
03. பட்டமரம் துளிர்க்கும்
04. எதிர்த்தாக்கம்
05. எனது கனவு பற்றி
06. அவன் வருகை வரைக்கும்
07. எதிர்பார்ப்புடனான சகிப்பு
08. பிரச்சினை குறித்த தேடல்
09. இருப்புக்காய்
10. கதை சொல்லு
11. உனக்காக எனது உயிர்
12. பதிலுக்கான காத்திருப்பு
13. கண்ணீருக்குப் பின்னால்
14. பேய்களும் மந்திரமும்

15. வாழ்வதற்காய்
16. மீட்சிக்காக கை கோர்த்து
17. மனங்குமுறி
18. வாழ்வதிலும் பார்க்க...
19. மீள்வருகை
20. மன்னிப்பீர்களாக
21. ஒரு பிடி மண்
22. பின்னால் பொதிந்திருப்பது
23. யாரைக் குற்றம் சொல்ல
24. உன்னால் முடியாது
25. மீண்டும் ஒலித்தல்
26. ராஜதந்திர விளையாட்டு
27. தலைவன் சொன்னான்
28. மௌனப் போரும் புன்னகை ஆயுதமும்
29. இனி அப்படித்தான்
30. இன்னும் புரியவில்லை
31. ஒற்றைத் தெரிவு
32. உனக்குமெனக்குமான வித்தியாசம்
33. இரங்கற்பா
34. பத்தோடு பதினோராவது இழப்பு

01. மீண்டும் உன் வருகைக்காக

கலக்கத்துடன்
உடைந்து கிடப்பவனே!
தோற்றுப் போனதாய்த்
துக்கப்படுகிறாயா?

உன் உணர்வுகளையெல்லாம் மொத்தமாக காற்று
சூரையாடிச் சென்று விட்டதாகவும், உன் வீரத்தை
எல்லாம் சுத்தமாக
யாரோ சலவை செய்து விட்டதாகவும்,
உன் கனவுகளை எல்லாம்
துண்டு துண்டாக
உடைத்தெறிந்து விட்டதாகவும்,
இனி உன்னால்
ஒன்றுமே முடியாதென்றும்
கருதிக் கொண்டிருக்கிறாயா?

எப்போதும் சொல்லப்படும் உண்மை,
ஒவ்வொரு தோல்வியின் முடிவிலும்
புதிய வெற்றிப் பயணம் தொடங்குகின்றது
மறந்துவிட்டாய் போலும்.

ஒன்றுமில்லையென்று
கவலை கொள்கிறவனே!

உனது உயிரும் வீரமும்
உன்னிடம் இருப்பதை
இன்னும் உணர்ந்து கொள்ளவில்லையா?

தலைவனில்லையென்று
கலங்கிப் போனாயோ!
இனி நீதான் தலைவன்
இப்போதே புறப்படு.

உரத்துச் சொல் உன் மீள் வருகையை
பாரெங்கும் அது பற்றிப் பரவட்டும்.
வாள் வீரனுக்கு
வாய்ச்சொல்லில் ஏது விளக்கம்.

உலகையே புரட்டிப் போடும்
உனது பலம் இன்னும்
உறைநிலைக்குப் போய்விடவில்லை,
கொஞ்சம் வரண்டு போயிற்று
அவ்வளவுதான்.

சிறிதாய் ஒரு மழைத்தூறலுக்காய்த்தான்

எதிர்பார்ப்புடன் காத்துக்கிடக்கிறது.

மழைத் தூறல் பற்றி எதிர்வு கூறு
கண் முன்னால் பசுமை தளைத்தெழும்,
செவிப்பறைகள் அதிர
புகழ் பாடும்.

தேசமெங்கும் வீரச்சாவு விதைத்தவனே!
விதைக்கப்பட்டவைகள்
முளைக்கத்தானே வேண்டும்,
பசுமை நிலத்தில் போடப்பட்டது
வீண் போனதாய்க் கிடையாது.

02. புதிதாய்ப் புறப்படுதல்

என்னைக் கைது செய்து
சிறையிலடைத்து

சித்திரவதை செய்யுங்கள்.

உறங்கிக் கொண்டிருக்கும்
இனந்தெரியாத மனிதர்களைத்
தட்டியெழுப்பி விடுங்கள்.

துப்பாக்கிகளை
எண்ணெய்யிட்டுத் துடைத்து
தயார்படுத்திக் கொள்ளுங்கள்,
இனி நான் கவி பாடப் போகிறேன்.

உங்களால் பறிக்கமுடியாது போன
ஒரு ஆயுதம்
இன்னும் மிச்சமிருக்கிறது.

உங்களால் நசுக்கமுடியாது போன
உணர்வுகள் உயிர்ப்பு பெறுகின்றன,
எல்லாவற்றுக்கும் ஆற்றல் கொண்டனவாய்.

காவுகொள்ளப்பட்ட என் தேசத்து
வீர வீராங்கனைகள் பற்றி,

நான் கவிபாடப் போகிறேன்.
கனவாகவே ஆகிப் போன
என் தேசத்தில்,
இன்னும் நான் மிச்சமிருக்கிறேன்.

தீவிரவாதிகளைப் பற்றியும்
பயங்கரவாதிகளைப் பற்றியும்
இனி நான் கவிபாடப் போகின்றேன்.

நீங்கள் வெற்றி கொண்டதும் உண்மை, நாங்கள்
தோற்றுப் போனதும் உண்மை, போராட்டம்
இன்னும் முடிவு பெறவில்லை. வெற்றியும்
தோல்வியும் தற்காலிகமானவை வரலாறு
அப்படித்தான் போதிக்கிறது.

இனியும் முடங்கிக் கிடக்க ஒண்ணா
ஏதேனும் செய்தாக வேண்டும்.
நாளைய எனது சந்ததி

வசை பாடாதிருக்கவேணும்.

இப்போதைக்கு சாத்தியப்பட்டது
உங்கள் வருகையை எதிர்பார்த்தபடி
இனி நான் கவி பாடப் போவது மட்டுமே,
சத்தியமாக எனக்கு முன்னால்
எந்த மனிதக் கேடயமும் இல்லை.

03. பட்டமரம் துளிர்க்கும்

கிளைகளோடும் துளிர்களோடும்
பூக்களோடும் பிஞ்சுக்களோடும்
களைகட்டியிருந்த எனது மரம்
பட்டுப் போயிற்று பார் அவலம்.

சரி சரி அப்படியானால்தான் என்ன!
துளிர்ப்பதும் உதிர்வதும்
இலைகளுக்கு தெரியாதா?

இது உதிர்ந்த காலம் என்றாகட்டும்
இப்போதைக்குப் பறவைகள் தங்காது
யார் கண்ணிலும் பெரிதாகத் தோற்றாது.

கொஞ்ச நாளைக்கு அப்படியே இருக்கும், இது பட்டுப் போன காலமாய்
எனக்கு நானே ஆறுதல் சொல்லியபடி
திருப்திப் பட்டுக்கொள்கிறேன்.

பரிதாபங்கள் எங்கிலும் பரவி
ஊசி முனைகளில் சேமிக்கப்பட்டு,
பாதுகாக்கப்பட்டும் பராமாரிக்கப்பட்டும்,
தோழர்களே!

எனது வாழ்வு பவுத்திரமாக இருக்கிறது
கருணை காட்டும் அரசியல்
ரொம்பவும் தான் காயப்படுத்துகிறது,
கொஞ்சம் வாய் மூடி மௌனியாகி
பார்த்துக்கொண்டு மட்டுமிருங்கள்.

சூரியன் உதிக்கிறது மறைகிறது
இரவு பகல் எல்லாம் மாறி மாறி
அவதானம் பெறாமல் சீராய்
இயங்கிக் கொண்டுதானே இருக்கிறது,

நானும் அப்படித்தான்
உங்கள் கழிவிரக்கம், ஆறுதல்,
ரொம்பவும் என்னை
இன்னும் இன்னும்
சங்கடத்தில் ஆழ்த்திவிட வேண்டாம்.

இப்போதைக்குப் பொறுத்திருங்கள்
பட்டமரம் துளிர்க்கும்,
சத்தியமாய்ப் பட்டமரம் துளிர்க்கும்
விரைவில் கிளைகளும் இலைகளுமாய்...

04. எதிர்த்தாக்கம்

யராலோ எதற்காகவோ
தூர அடிக்கப்பட்ட பந்து
இன்னும் சுற்றிக்கொண்டுதான் இருக்கின்றது.

இல்லை இல்லை,
யாராலோ அடிக்கப்படவில்லை,
அவர்களின் உதவியோடு
அவனால் தான் அடிக்கப்பட்டது

எனது இருப்பிடத்துக்கே வந்து
தைரியமாக அடித்து விட்டு
இப்போது அவன்
அங்கேயே அமர்ந்து கொண்டான்.

எதற்காகவோ அடிக்கப்படவில்லை,

நிறையக் காரணங்கள் இருந்தன
எனது இருப்பு அவனுக்கு
மொத்தமாகப் பிடிக்கவில்லை.

கோரப் பற்களுடன்
வேட்டையாடக் கிளம்பி
இப்போது அவன்
இளைப்பாறுகிறான்.

அவனுக்கு தேவை இருந்தது
நிறையவே கோபமும் இருந்தது
அவனது கோபத்தில்
நியாயமும் இருந்தது.

அதைவிட பல்லாயிரம் மடங்கு
எனது இருப்பிலும்
நியாயம் இருந்தது
அதனால்தான் அவனால்
எதனையும் சகித்துக்கொள்ள முடியவில்லை.

பந்து அடிக்கப்பட்டாயிற்று
இப்போது நான் மௌனமாக இருக்கிறேன். என்னால்
கதைக்க முடியவில்லை,
எனது நாவுக்கு பூட்டுப் போடப்பட்டுள்ளது.

ஒன்றும் கவலையில்லை
நிச்சயம் ஒரு நாள்
பந்து திரும்பி வரும்
மிகவும் சூதானமாக,

எல்லாத் தாக்கங்களுக்கும்
எதிர்த் தாக்கம் உண்டு,
சமமானதும்
நிகரானதுமாய்.



05. எனது கனவு பற்றி

என் தேசம் பற்றிய கனவுகள்
வசப்படாமலேயே
கலைந்து போயிற்று.

எத்தனை தசாப்தங்களாய்
காத்திருந்த விடியல் அது,
கண்ணீரோடும் இரத்தத்தோடும்
எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்த படி,
மரணத்தைச் சட்டைப் பையில் சுமந்தபடி, உயிரைக்
கையில் பிடித்துக்கொண்டு...

பருவ காலத்தில்
இடம்பெயரும் மந்தைகளாய்,
அலைக்கழிக்கப்பட்டு
அல்லோலகல்லோலப்பட்டு
அள்ளுண்டு போன போதெல்லாம் கூட,
என் தேசம் பற்றிய கனவுகள்
நம்பிக்கையால் பட்டை தீட்டப்பட்டது.

உறவுகள் எல்லாம்
உடைந்து சிதறிய இலவம் பஞ்சாய்
உலகமெல்லாம் வீசப்பட்ட போதும்...

குறட்டை விட்டு தூங்குவதற்கு
ஒரு ராத்திரி கூடக் கிட்டாத போதும்...
சுதந்திர தேசங்களிலெல்லாம்
அடிமை ஊழியம் செய்த போதும்...

தேசம் பற்றிய கனவுகள் வலுப் பெற்றன- உள்ளம்
சோர்ந்து போகவில்லை,
நாளை நாளை என்று
நம்பிக்கையுடன் நாட்கள் கடந்தன.

கலைக்கப்பட்ட தேனீக்கள்
ஒற்றையாய்ப் பிரிந்து பறந்தாலும்,
எங்காவது புதிதாய்க் கூடு கட்டி
ஒன்று சேராமலா போய்விடும்?

தீ வைத்தவன் தேன் சுவைக்கட்டும்!
இறந்தவைகள் குறித்து ஆட்சேபமில்லை! நாளைகள்
நமக்காகப் பிறக்கும்,
மலர்கள் நமக்காக மலரும்.

கோடி மலர்களில் மொய்த்து
தேன் சேகரிப்போம்,
சோர்ந்து போகாது சேகரிப்போம்.

மலைச்சாரல் மரப்பொந்து
எதையும் விடாமல்
கூடு செய்வோம்,
தேசம் பற்றிய கனவுகளுடன்.

06. அவன் வருகை வரைக்கும்

தொழுவங்களிலிருந்து விடுதலை,
மந்தைகளுக்கு கொஞ்சம் சுதந்திரம்,

சட்டியிலிருந்து அடுப்புக்குள் போல்.
எங்கிருந்து ஊற்றெடுக்கிறதோ கண்ணீர்! இன்னும்
வற்றிப் போகாமல்,

சாவுகளோடு நட்பு கொண்டாடி
துப்பாக்கி அரண்களால்
காவல் காக்கப்பட்ட சிதைந்த வாழ்வு,
கம்பி வேலிகளுக்கு அப்பால்
இப்போதுதான்
புதிதாய்த் தூக்கியெறியப்பட்டது.

எல்லாம் பூரணமாக்கப்பட்டு
பஞ்சணைகளாயும் சாமரங்களாயும்...
கோடி கோடிகளாய்க் கொட்டி
செய்யப்பட்ட அபிவிருத்தி முடிவில்...
கம்பி வேலிகளுக்கு அப்பால்
இப்போதுதான்
புதிதாய்த் தூக்கியெறியப்பட்டது-
கைவிலங்குகள் அகற்றப்படாமலேயே!

பத்திரிகை செய்திகளுக்கும்

அரசியல் அறிக்கைகளுக்கும்
அழகாய்த் தான் இருக்கிறது
மீள் குடியேற்றம்.

முற்றுப் பெறாத தொடர்கதை போன்றது
எனது அவலம்,
யார் வேண்டுமானாலும்
எப்போது வேண்டுமானாலும்
எப்படி வேண்டுமானாலும்
விருப்பப்படி எழுதித் தொலைக்கலாம்,
காவல்காரன் இல்லாத தோட்டம்
யாருக்கில்லை உரிமை!

07. எதிர்பார்ப்புடனான சகிப்பு

எனக்கு நம்பிக்கையிருக்கிறது,
காவல்காரன் நிச்சயம் ஒருநாள்-
தயார்படுத்தல்களோடு வருவான்,
இரவு பகல் பாராது காவல் காப்பான்,
வேலியமைத்துக் காவல் காப்பான்.

தடுப்பு வேலிகளைத் தகர்த்தெறிவான்.
எனது வாழ்க்கைக்கு -

மிகவும் புதிதாய்
உயிர் ஒளி பாய்ச்சுவான்,
என் துயர் துடைத்து இன்புறுவான்.

இன்றோ நாளையோ நாளை மறுநாளோ, அவன்
வருவது மட்டும் உறுதி !
அதுவரைக்கும் கட்டாக்காலிகள்
விருப்பப்படி மேய்ந்து களைக்கட்டும்.

உணர்வுகள் அற்றுப் போனாலும்
இதயம் இயங்கிக் கொண்டு தான் இருக்கும். துவம்சம்
செய்யப்பட்ட
எத்தனை ஆயிரம் சாம்ராஜ்யங்கள்
மீண்டும் உயிர்த்தெழுந்துள்ளன.

சத்திரசிகிச்சைக்குப் பின்னரான வலி,
சகித்துக்கொள்ள கஷ்டமாய்த்தான் இருக்கும். தீர்வு
கிடைத்துவிட்ட திருப்தியோடும்,
அடையாளம் காணப்பட்ட

பிரச்சினைகளோடும்,
சகித்துக் கொள்ளல்
துன்பத்திலும் சுகம்.

காலம் கைதேர்ந்த ஆசான்,
கற்பித்தல் முறையும் கூட
வித்தியாசமானது.

நாளை சுக விடியல் காண
கறைகள் களைந்த புதிய பக்கங்கள்...
நம்பிக்கைகளால் ஒளியூட்டப்பட்ட
புத்தம் புதிய கவிதைகள்...

எல்லா அமைதிக்குப் பின்னரும்
உறங்கிக் கிடக்கும் போராட்டம்,
மெதுவாகத்தான் விழித்துக் கொள்ளும்.

காவல்காரன் வருவான்,
இதயம் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது, சகித்துக்
கொள்ளல் துன்பத்திலும் சுகம்,
எனக்கு நிறையவே நம்பிக்கை இருக்கிறது.

08. பிரச்சினை குறித்த தேடல்

இன்னும் தேடிக்கொண்டுதான் இருக்கிறேன் அந்தப் பிரச்சினை எதுவென்றும்,

அது எங்கே இருக்கிறது என்றும்.
அதைக் கண்டடைய வேண்டிய
அவசரமும் அவசியமும்
இப்போது பிறந்திருக்கின்றன.

அகலக் கிளை பரப்பி
ஆழமாக விழுதிறக்கி
மூன்று தசாப்தங்கள்
பெருஞ் சவாலாய் ஓங்கி நின்றது...

புயல்களையும் சூறாவளிகளையும்-
எதிர்கொண்டு நிலைத்து நின்று...
பின்னரும் எப்படி
அவ்வளவு எளிதாய் வீழ்ந்து போயிற்று?

எதையும் இன்னமும் நம்ப முடியவில்லை, மதியால்
வெல்ல முடியாத அனுபவ வீச்சு, சதியால்தான்
பிடுங்கி எறியப்பட்டது.

இராமன் கற்றுத் தந்ததை
பயன்படுத்திய பெருமை
இராவணனுக்கானது.
சுக்கிரீவப் பட்டாளம் துணையிருக்க
வாலிகளுக்கு
பரிதாப மரணம் இயல்பானது.

சதி செய்தது ஒரு சுக்ரீவன் அல்ல -
ஓராயிரம் சுக்ரீவன்கள்,
எல்லா வசதிகளோடும்,
உலகெல்லாம்
வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

பின்னரும் பின்னரும்
தொடர்ந்த தோல்வி ,
கற்றுக் கொடுக்க
மறந்தது ஏராளம்.

முகம்மது நபியை கைவிட்ட நயவஞ்சகம் “உஹது”
களத்தைப்
புரட்டிப் போட்டது,

சிதைந்து சின்னாபின்னமாகித் திரும்பும்
தானையும் - தலைவனும்,
பின்னும் பின்னும் வென்று சரித்திரமாகி, மறுக்க
முடியாத வரலாற்றுப் பக்கங்களின்
சொந்தக்காரர்களாய் மாறிப் போயினர்.

“ஹென்றி கிங்” என்றால் தோல்வி,
சிலந்தி சொன்ன செய்தி வெற்றி.
இழப்புக்களால் புடம் போடப்பட்ட தோல்வி,
நாளையை வசப்படுத்தும் போதகனாகி,
விடாமுயற்சியை அள்ளி வீசுகின்றது.

மறுபடியும் மறுபடியும் தொடரும் இழப்பு
புலன்களுக்கு அப்பால் நின்று பேசும்,
உனக்குத் தெரியாதது ஏதுமில்லை,
எனக்கும் அது தெளிவாகத் தெரியும்,
நீ வெற்றி கொள்ளவில்லை
எப்போதைக்கும் அது உன்னால் முடியாதது, நீ

வெற்றி கொள்ளச் செய்யப்பட்டாய்.

எனது புற்றுக்குள் நுழைந்த பாம்பை
அடையாளங் காணத் தவறி விட்டேன்,
துவம்சம் செய்து நிலை கொண்டிற்று.

எல்லாம் எப்போதும் தொடர்வதில்லை,
வீழ்ந்த மரம் நிலை பெறப் போவதில்லை, புதிய மரம் முளைக்கும்,
அகலக் கிளை பரப்பும்,
விழுதிறக்கும் அப்போது எனக்குத் தெரிந்திருக்கும்
பழைய மரம் எப்படி வீழ்ந்ததென்று!

மறைந்திருந்து அம்பெறிந்த
இராமனுக்கும் வெற்றி,
முகத்துக்கு முகமாய்
முன்னிருந்து வாள் வீசிய
முகம்மது நபிக்கும் வெற்றி,
எல்லாவற்றிற்கும் முன் நிற்பது யுத்த தந்திரம்

எல்லாவற்றிலும் மறைந்திருப்பது சதிச் சரித்திரம்.

சில்லைறைகளில் கரைந்து போன மானம், ஒரு நாள்
எல்லாமும் தெரியவரும்.
அப்போது சரித்திரம் எழுதப்படும்,
பிரச்சினை எதுவென்றும்?
எங்கே இருந்ததென்றும்?

09. இருப்புக்காய்

எனது இருப்பு
உனக்கு எப்படி அசௌகரியம் ஆயிற்று?
எனக்குரிய காற்றையும்,
எனக்குரிய மழையையும்,
எனக்குரிய சூரிய சந்திர ஒளி வீச்சையும், உன்னால்
தடுத்து விட முடியுமா?

உனக்கானது எப்போதும் உனக்குரியது!
எனக்கானது எப்போதும் எனக்குரியது!
நிலத்தில் மட்டுமேன்?
அராஜகம் புரிந்து எதிர்ப்புக் காட்டுகிறாய்.

எனது இருப்பை
நீ "நோண்டிப்" பார்க்கையில்,
உனது இருப்பை நானும்
அதே அளவு பலமிக்கதாய்...

வீரம் உனக்கு மட்டுமல்ல-
எனக்கும் வசப்பட்டுப் போனதுதான்.
உனக்கு அங்கீகாரம் இருப்பதால்
இலகுவாக முத்திரை குத்தி,

என்னை பயங்கரவாதியாக்கி
தனிமைப்படுத்தி விடுகிறாய்.

குத்திய முத்திரையை மீண்டும் மீண்டும் பன்மடங்கு
பெருப்பித்தபடி
என் மீது அத்துமீறுகிறாய்,

உனக்கான எதிர்ப்புக் குரலை
மறுக்கிறாய்,
எனக்கான ஆதரவுக் குரலை
எதிர்க்கிறாய்,
நியாயத்தைப் புரிந்து கொள்ள
கடைசி வரை
உன்னால் முடியாமல் போயிற்று.

உனது இருப்பு உனக்கு அவசியம்
அது போல் தான் எனது இருப்பும்.
உன்னிடம் பிச்சை கேட்கவில்லை,

கிள்ளிப்போடவும் மறுக்கவும் விமர்சிக்கவும்,
எனக்குரியதை நீ எடுத்துக்கொள்கையில் பறித்தெடுக்க
எனக்கு உரிமையுண்டு.

உன்னால் முடிந்ததை எல்லாம்
மொத்தமாக செய்து முடித்து விட்டாய்.
சிதைக்க நினைத்ததையெல்லாம்
முற்றாகச் சிதைத்தும் விட்டாய்.
உன் புத்திக்கு படாத ஒன்று
இன்னமும்
எஞ்சியிருக்கிறது தெரிந்து கொள்!

உணர்ந்து கொள்ள முடியாதபடி
எனது மீள் வருகை நிச்சயம் நிகழும்,
உனக்குத் தெரிந்தவையெல்லாம்
அப்போது பொய்த்துப் போகும்.
அதுவரைக்கும் கருத்தும் பேச்சும்
தீவிரவாதியாக, பயங்கரவாதியாக,
கட்டமைத்துக் காப்பாற்றட்டும்.

உனது இயங்கு தளங்களில் எல்லாம்
எனது விதைகள் முளைத்தெழும்,
அப்போது பயங்கரவாதியாகவோ
வேறேதேனும் ஒன்றாகவோ
இருந்துவிட்டு போகிறேன் பரவாயில்லை!

இப்போது காற்று
உன் பக்கம் வீசிக்கொண்டிருக்கிறது,
நான் பொறுமை கொள்கிறேன்
விரைவில் அது
என் பக்கமும் வீசும் என்ற நம்பிக்கையோடு.

உன் திட்டங்களெல்லாம் பொய்த்துப் போக, என்
கனவுகள் மெய்ப்படும்,
அப்போது நான் சுதந்திரமாக சுவாசிப்பேன்.
எனக்குரிய எதையும் உன்னால்
எப்போதும் தடுக்க முடியாது,

என் பார்வையில் நீ பயங்கரவாதியாகவும் உன்
பார்வையில் நான் பயங்கரவாதியாகவும் போராடிக்

கொண்டிருப்போம்,
உனது இருப்புக்காக நீயும்,
எனது இருப்புக்காக நானும்.

10. கதை சொல்லு

உன் குழந்தைக்கு கதை சொல்,
ஆமை முயல் ஓட்டப் பந்தயம்,
வடை சுட்ட பாட்டி, காக்கை நரி...
அர்த்தமிழந்த அடையாளங்கள் பற்றியல்ல, ஷெல்
வீச்சு பற்றியும்

பதுங்கு குழி பற்றியும்
எறிகணை வீச்சு, பல்குழல் பீரங்கி பற்றியும்...
உயிரைக் கையில் சுமந்த படி,
ஓடித் திரிந்து, கண் முன்னால் செத்து மடிந்து, அழுகிப் போன பிணங்கள் பற்றியும்...
பாலும் இன்றி வாய்க்கரிசியுமின்றி,
சுமப்பதற்கு நான்கு பேருமின்றி,
கைவிடப்பட்ட உடலங்கள் பற்றியும்
உன் குழந்தைக்கு கதை சொல்

நாளை ஒருநாள்
அவன்தான் நம் தலைவன்,
உனது கண்ணீராலும் இரத்தத்தாலும்
நனைந்து போன வரலாற்றுப் பக்கங்கள் அவன்
முன்னால் புரட்டப்படட்டும்,

உனது வார்த்தைகள்
புடம்போட்டு வார்த்தெடுக்கட்டும்,
இப்போதைக்கு சொல்வதற்கு

பஞ்சமில்லாமல் எஞ்சியிருப்பது
கதைகள் மட்டும்தான்.

உயிரில் நனைத்தெடுத்து
கண்ணீரால் உரமூட்டி,
குருதிக் கறை படிந்த சரித்திரத்தின்
சோகமான பக்கங்களை,
வீரத்துடன் பிசைந்து ஊட்டிவிடு.

கற்பழிக்கப்பட்ட சோகங்களையும்
கழுத்து வெட்டப்பட்ட முண்டங்களையும்
சதியால் தோற்றுப் போன வீரர்களையும் கதை
மாந்தர்களாக்கி -நாள்
தவறாமல் கதை சொல்லடி தாயே

பின்னொரு நாளில் அவனும்
முன்னோர்களைப் பார்த்து,
“தவறு செய்து வீட்டீர்கள்
தீவிரவாதிகளே, பயங்கரவாதிகளே”
என்று சொல்லாதிருப்பதற்கேனும்,
கதை சொல்லடி கண்மணி.

இன்னும் திறந்தவெளிச் சிறைக்குள்
விலங்கிடப்படாத கைதிகளாய்
தடுத்து வைக்கப்பட்டிருப்பது பற்றியும்,
வசதி வாய்ப்புகள் என்ற பெயரில்
இருப்பு களவாடப்படுவது பற்றியும்,
சமூக மேம்பாடு என்ற தொனியில்
இருட்டடிப்புச் செய்யப்படும் வரலாறு பற்றியும்,
இப்போதிருந்தே சொல்லத் தொடங்கு.

நாளையொரு நாள்,
அவன் தான் நம் தலைவன்.
புதிதாய் ஒரு சரித்திரம் படைக்கக் கூடும்,
அதுவரை -
நம்பிக்கையோடும்
உறுதியோடும்
கதை சொல்.

11. உனக்காக எனது உயிர்

உலகம் சுற்றும் வரை ஓயாதிரு!
காற்று வீசும் வரை ஓயாதிரு !
கடலலைகள் உள்ளவரை ஓயாதிரு!
உன்னை ஓயாதிருக்கச் சொல்ல

ஆயிரமாயிரம் உதாரணங்கள்
ஒன்றன் பின் ஒன்றாய்...

வீழ்வதும் எழுவதும் வீரனுக்குப் பெரிதல்ல, சாவதும்
கூட இன்பங்களிலொன்று,
உனது தோல்வி துன்பங்களோடு தொடங்கி
துன்பங்களோடு முடிந்து போயிற்று.

நீ போராடித் தோற்றவன்,
நீ போராடிச் சாவடைந்தவன்,
உன் தலைவனின் அந்திமம் கூட
கனவு தேசத்தில் நிகழ்ந்தது,
அவன் அஸ்தி கூட இந்த தேசத்தில் தான்...

சாவு கூட உனக்கு தோல்வியில்லாத போது
சின்னஞ்சிறிய இந்த தோல்வி மட்டும்
எப்படி உன்னை வீழ்த்த முடியும்?

காலத்தை வென்று சரித்திரம் படைத்தவன் நீ !
எத்தனை பெரிய துன்பங்களையெல்லாம் மென்று
தின்று ஏப்பமிட்டவன் நீ !
உன்னால் முடியாதது ஏதுமுண்டா சொல்?

கண்ணீர் விட்டுத் துவண்டு போய்
கலக்கத்துடன் உறங்கிப் போய்
கைசேதங் கொண்டு பெருமூச்செறிந்து
எப்போதேனும் முடங்கிப் போனவனா நீ ?

வீர காவியம் படைத்தவன்!
புத்தாயிரத்தில் புது சரித்திரத்தின்
ஒப்பற்ற சொந்தக்காரன் !
உன்னைப் போய்
ஒரு தோல்வி வீழ்த்திட முடியுமா?

உலகமெல்லாம் அகலக் கிளை பரப்பி,
சுதந்திர தேசமெல்லாம் அடிமைப்பட்டு,
கொத்தடிமை சேவகஞ் செய்து,
வேர் பதிக்கும் வரை எத்தனை இழப்பு,

உன் கண்ணீருக்கும் கலகத்துக்கும்
இழப்புகளுக்கும் வேதனைகளுக்கும்
அவமானங்களுக்குமாய் அர்த்தமற்றுப் போதல்
அனுமதிக்க முடியுமா உன்னால்?
அனுபவித்த அத்தனைக்கும் சேர்த்து
மீண்டும் கனவு காணத் தயாராகு!
சுதந்திரமான உனது தேசத்தை.

இழப்புக்களுக்கு அர்த்தமுண்டென்பதை
மீண்டும் ஒருமுறை நிறுவிப் போடு,
கனவுகள் அப்படித்தான்
நிஜமாவதும் கலைந்து போவதும்,
தோல்விகள் உன்னை
ஒருபோதும் வலுவிழக்கச் செய்திட வேண்டாம்.
தோற்றுப் போனது ஆயுதங்கள் மட்டும்தான்,
மானமும் வீரமும் இன்னமும்
உயிர்ப்போடுதான் இருக்கிறன.

மீண்டும் மீண்டும் நினைவிற் கொள்
வரலாறு நெடுகிலும்
தோற்கடித்தவன் நீ !
இப்போதைக்கு
தோற்கடிக்கப்பட்டிருக்கிறாய்,
போராடித் தோற்றவன் நீ !
கோழைகளுக்கு வசப்படாத ஒன்று,
உனக்கு வசப்பட்டுப் போயிற்று,
பெருமையோடு அதில் பாடம் படி
மீண்டும் உன்னை நிலை நிறுத்து,
உனது கனவுகளுக்கு அர்த்தம் கொடு
புதிய லட்சியங்களுடன் புறப்படு.

உறவுகளோடு பகைப்படாத பயணம் ,
முறுகல்களுடன் முடங்கிப் போகாத தயார்படுத்தல்,
காட்டிக் கொடுப்புகளுக்கு புலப்பட்டுப் போகாத
துல்லியமான திட்டமிடல்,
எல்லாவற்றோடும் திரும்பவும் புறப்படு.

மாவீரம் வாழ்ந்த மண்ணில்
வேறேதும் துணை வேண்டாம் உனக்கு.

சில்லரைப் பசங்களின்
பசப்பு வார்த்தைகளுக்குள்
சிக்கிக் கொள்ளாதபடி எழுந்து வா,
உனது வருகைக்காக
காலங்காலமாய்க் காத்திருப்பேன்.
எப்போதும் நீ ஓயக் கூடாது!
உறுதியில் தளும்பல் வேண்டாம்,
மெதுவாக வந்தாலும் கவலையில்லை ,
அசைக்க முடியாத அடித்தளங்களை நிறுவி ஆணை மட்டும் இடு
உயிர் கொடுக்க நான் தயார்!!

12. பதிலுக்கான காத்திருப்பு

எங்கே போய்விட்டீர்கள் எல்லோரும்!
எனது குரல் கேட்கவில்லையா?
யாராவது செவிமடுக்கின்றீர்களா?
ஒருவராவது ஆம் சொல்லுங்கள்
அது ஒன்று போதும் எனக்கு,
எனக்குத் தெரியும்

சத்தியமாய் நான் நம்புகிறேன்,

எனது நம்பிக்கை
மிகவும் உறுதியானது,
யாராவது இருப்பீர்கள்
எனது அழைப்பை செவிமடுத்தபடி,
இப்போதைக்கு முடியவில்லை போலும்
எனது அழைப்புக்குப் பதில் சொல்ல.

கவலையில்லை! கவலையில்லை!
நீங்கள் அமைதியாக
என்றாவது ஒருநாள்,
அதுவும் வெகு விரைவில்,
எனக்கு பதில் சொன்னால் போதும்,
அதற்காகவே காத்துக் கிடக்கிறேன்
செவிகளைத் தீட்டியபடி.

13. கண்ணீருக்குப் பின்னால்

எனது கண்ணீர்
இன்னமும் அர்த்தமிழக்கவில்லை,
அதன் ஈரம் கூடக் காயவில்லை,
இமைகளில் பற்றிய துளிகள் கூட
உதிர்வதற்குத் தயாராய்...
கண்ணீர் வழிந்த ஈரத்தடம் கூட
இன்னும் அப்படியே தான்...

முட்கம்பிகளுக்கு பின்னால்
சிறைப்பட்டுப்போன விழிகளுக்கு
கண்ணீர் எத்தனை ஆறுதல் தெரியுமா!
அதனால் தான் என்னவோ
இன்னமும் அர்த்தமிழக்காது
ஈரமாகவே இருக்கிறது.

எனது கைக் குழந்தை
வீரிட்டு அழுகின்றது,
கடல்கடந்து அது பயணிக்கிறது,

உனது காதில் விழ நியாயமில்லை.
நான் என்ன செய்ய முடியும்!
கண்ணீரை ஊட்ட முடியுமா?
பசி தானும் தணிந்து விடுமா?

அந்தப் பிஞ்சின் அழுகைக்கும்
நிறைய அர்த்தங்கள் பின்புலமாய்,
அது கூட உனக்குப்
புரியாமல் போக நியாயமில்லை.

பத்திரிகைச் செய்திகளுக்காய்
கையேந்தும் படியாயிற்று,
விதி என்று நொந்து கொள்வதா!
அனுபவித்துக் கழித்து விடுவதா!
எனக்குப் புரியவில்லைதான்,
வயிறு அதைக் கேட்குமா?

மானத்தை இழந்தாயிற்று!

இனிமேலும் -
அதை விற்பனை செய்திடும்
நிர்ப்பந்தங்களைத் திணித்துவிட்டு
ஓய்ந்து விட்ட வெடியோசை
மீண்டும் இப்போதைக்குக்
கேட்க வேண்டாம்.

என்னை மன்னித்துக்கொள்,
உன்னைக் குறை கூற
தைரியமில்லை எனக்கு,
மனச்சாட்சி உயிர்ப்போடு இருப்பதால்,
இப்போதும் வடிக்கின்ற கண்ணீர்
உனது வீரச் சாவுக்கும் சேர்த்துத்தான்,
என்னை ஆற்றுப்படுத்திக்கொள்ள
மனது எளிய சொற்களைத் தான்
யாசிக்கின்றது.

எதையும் நொந்து கொள்ள
எனக்குத் தோன்றவில்லை,
இருந்தாலும் மாவீரர்களே!
என்னை மன்னித்து விடுங்கள்.

வற்றிப்போன மார்பகங்கள்
பாலூற மறுத்து விடுகின்றன,
ஒரு சொட்டுத் தண்ணீருக்காய்
உயிரையே தானம் கொடுக்கும் துணிவு
வேறு தெரிவில்லாத படியால்.

வீரத்தைக் கூட விறைப்போடும்
கனத்துப் போன இதயத்தோடும்
மறுதலித்து விடுகிறேன்.

அடிமையாக்கப்பட்ட பின்னர்
ஊறத் தொடங்கிய விழிகள்,
ஊற்றிக் கொண்டே தொடராய்,
எங்கோ வெறித்துப் பார்க்கின்றன,
சாந்தி அடைந்த ஆத்மாக்களின்
தரிசனம் கிட்டக் கூடும் என்ற
சின்னஞ் சிறிய நப்பாசையில்,
ஈரங் காயாத கண்ணீருக்கு

நிறையவே அர்த்தம் இருக்கிறது.

14. பேய்களும் மந்திரமும்

பேய்கள் பற்றித் தெரியுமா உனக்கு?
பேய்களின் தரிசனம் கிடைத்திருக்கிறதா? தரைகளில்
ஊர்ந்து திரிவனவும்,
தீட்டிய கண்களோடு
காவு கொள்ளக் காத்தபடி
கடற் பரப்பில் நிலை கொண்டிருப்பனவும்,
அவ்வப்போது வானில் சஞ்சரித்து
நூற்றுக் கணக்கில் உயிர்களை
நோகாது அள்ளிச் செல்வனவும்,
பிரச்சினை தீர்த்து வைக்கும் பாங்கில்
அதலபாதாளத்தில் தள்ளி விடக் காத்திருக்கும்
சாந்தத்தை அள்ளி பூசிக் கொண்டனவும்,

எமக்குப் பயமாக இருக்கின்றது,
புத்தர் பெருமானே!
எம்மைக் காப்பாற்றுங்கள்.
எல்லாப் பேய்களும்
விதவிதமாய் அரக்க கோலம் பூண்டு,
எமது உயிரை மட்டுமே
குறி வைத்துக் காத்திருக்கின்றன,
இரத்தம் குடிப்பதில்

அலாதிப் பிரியம் அவைகட்கு!

புத்தர் பெருமானே!
உங்கள் அமைதியை அள்ளித் தெளியுங்கள்,
பேய்களின் குரூரம் குறையக் கூடும்,
எனது துரதிஷ்டமே!
எல்லா பேய்களும் ஒன்று சேர்ந்து
ஒருமித்து நகர்கின்றன.

புத்த துறவிகளே விரைந்து வாருங்கள்,
எல்லோரும் உரத்துச் சொல்லுவோம்,
“பானாதி பாதா வேரமணி சிக்காபதங் சமாதியாமி
பானாதி பாதா வேரமணி சிக்காபதங் சமாதியாமி
பானாதி பாதா வேரமணி சிக்காபதங் சமாதியாமி”

எத்தனை ஆயிரம் முறை
உரத்துச் சொல்லியும்,
குழந்தை குட்டிகளோடு
ஒருமித்துச் சொல்லியும்,

வெறி கொண்ட பேய்கட்கு
அது ஒன்றும் புரியவில்லை போலும்!
எல்லாம் முடிந்த பின்னரும்
கண்ணீரோடு மீண்டும் சொல்கிறேன்,
“பானாதி பாதா வேரமணி சிக்காபதங் சமாதியாமி”

குறிப்பு: ‘பானாதிபாதா வேரமணி சிக்காபதங் சமாதியாமி’ என்பது உயிர்களைக் கொன்று சமாதியாக்கிடுவதைத் தடைசெய் யும் புத்தர் பெருமானின் ஐம்பெரும் போதனைகளிலொன்று.

15 வாழ்வதற்காய்

நீ பட்ட துன்பங்களுக்கெல்லாம்
ஆறுதல் சொல்லி ஆற்றுப்படுத்த
என்னிடம் வார்த்தைகள் இல்லை.
சொந்த தேசத்தில்
அடிமையாக்கப்பட்டு,
விலங்கிடப்பட்ட வாழ்க்கை
விக்கித் தவித்துப் போகிறது,
எந்த தெரிவுகளும் அற்று
தொந்தரவுகளுடன் சங்கமமாயிற்று.

உன் நினைவுத் திரைகளில்
பதிந்து போன உருவத்தை
தற்காலிகமாக அழித்து விடு,
அதன் படிமங்கள் உன்னை
இன்னுமின்னும் அடிமையாக்கும்
அவலம் அரங்கேற வேண்டாம்,
அதற்காகவேனும் நீ
அதைச் செய்தாக வேண்டும்.

திறந்த வெளிச் சிறைகளில்-
உஷ்ணமிக்க தென்றல்
உனை வருடிக் கொல்கிறது,
எனக்கு எல்லாம் புரிகின்றது.

அமைதியாகப் பேசிப் பேசி,
உனது பலவீனங்களின்
நலிந்த புள்ளிகளில் தாக்கப்படும்,
மனிதாபிமானத்தின் வீழ்ச்சி

உன்னைத் திணறடித்து விடமாட்டாது.

இப்போதைக்கு நீ உயிர் வாழ வேண்டும் அதற்காக
உரத்துப் பொய் சொல்,
யாருக்கும் அஞ்சத் தேவையில்லை,
என்னை உனது எதிரியென்றும்
நான் உன்னை கொல்ல வந்தவனென்றும்,
பகைமையோடும் கண்ணீரோடும்
தேர்ந்த நடிகன் போல
எனக்கெதிராக சாட்சியமளித்து விடு.

நீ பட்ட துன்பங்களுக்கெல்லாம்
ஆறுதல் சொல்லி ஆற்றுப்படுத்த,
என்னிடம் வார்த்தைகள் இல்லை.
உன்னைக் காத்துக்கொள்ளும் நிர்ப்பந்தம் உனது
கைகளிலாயிற்று.

உனது வார்த்தைகள் இப்போதைக்கு
மதிப்பிடுதற்கரிய பொக்கிஷம்,
எனக்கெதிரானது என்பதால்
அதன் கனதி கூட மிக அதிகம்,
பிரயோகித்து தற்காத்துக்கொள்.

கழிந்து போன அத்தியாயங்கள் பற்றி
கருத்துச் சொல்ல ஒன்றுமில்லை,
வசப்படாத வார்த்தைகளால்
போலி உணர்வு கலந்து,
உன்னைத் திருப்திப்படுத்தி விட முடியும், அதற்கு
நான் தயாரில்லை
உண்மையாக இருக்க விரும்புகிறேன்,
அனைத்திற்காயும் சேர்த்து
என்னை மன்னித்து விடு.

உன்னைத் துன்பத்தில் ஆழ்த்திவிட்டு
நான் மட்டும் என்ன
ஆறுதலிலா காலம் கழிக்கின்றேன்!
உனக்குக் குத்தப்பட்டிருக்கிற முத்திரை
மனிதக் கேடயம்!
எனக்குக் குத்தப்பட்ட முத்திரை
பயங்கரவாதி !
நல்ல பொருத்தம்,

நல்ல பொருத்தம்.

என்னிடமிருந்து உன்னைப் பாதுகாக்க
எத்தனை எத்தனை முயற்சிகள்,
அதில் நீ கொல்லப்பட்டாலும் கூட நியாயம்,
உன்னைக் கொல்வதற்கும்
என்னைக் கொல்வதற்கும்
வசப்படாத காரணிகள்,
தீவிரவாதத்திற்கு எதிரான -
மனிதாபிமான நடவடிக்கையால்,
இலகுவாக வசப்பட்டுப் போயிற்று.

16.மீட்சிக்காக கை கோர்த்து

தோழர்களே! வாருங்கள்,
அன்பர்களே! வாருங்கள்,
உறவுகளே! நீங்களும் வாருங்கள்,
சிதைவுகளுக்குள் சிக்குண்டு கிடக்கும்
வாழ்க்கையை மீட்டுத் தாருங்கள்,

நானாக எழுவதற்கு முடியாதபடி,

துப்பாக்கிகளினதும்
பீரங்கிகளினதும்
ஆடுகளத்தில் சிக்கி,
சின்னாபின்னமான
எல்லாவற்றுக்குள்ளும்,
ஒருவனாய் ஆகிப்போன துரதிஷ்டம்...
ஒரு கை தாருங்கள் எனக்கு,
எழுந்து கொள்வதற்கு.

தேசம் பற்றிய கனவுகள்
கனவுகளாகவே கலைந்து போன பின்னும்
எஞ்சியிருப்பது,
பலவீனப்பட்ட வாழ்வும்,
உயிர் போகும் வலியோடு
ஊனமான உடலங்களும்தான்.

ஒரு நேரச் சோற்றுக்கும்,
ஒரு மிடருத் தண்ணீருக்கும்,
நொந்து போன நினைவுகளோடு

சோர்ந்து கிடக்கும் எனது வாழ்வு,
காத்துக் கிடப்பதெல்லாம்,
ஊன்றி நிலைப்படுவதற்கும்
பற்றிப் படர்ந்து விடுவதற்கும்
ஒரு உதவிக் கரத்தின் நீளுகைக்காகவே.

அவ்வளவு எளிதில் உங்களால்
உதவிட முடியாது,
தடைகள் எல்லாம் தாண்டி
எப்போது உங்கள் குரல்
எனக்கு மிக அண்மையில்
ஒலிக்கும் என்பதும் தெரியாது,

ஈனக் குரலில் உரத்துக் கத்தி
உதவி கோரும் உரிமை கூட
மட்டுப் படுத்தப் பட்டிருக்கிறது தெரியுமா?
எல்லாவற்றிற்கும் அப்பால்,
நான் தேவையுடையவன்
நீங்கள் அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நுட்பங்கள் நிறைந்த தெரிவுகளும்
சாதுரிய மிகுந்த நகர்வுகளும்,
நீண்ட தூரத்தின் பின்னர்
சாத்தியப்படுத்தக் கூடும்,
அதுவரைக்கும் அனைத்தையும்
சகித்துக்கொண்ட படி,
சிதைந்து போன வாழ்வை
தாங்கிக் கொள்கிறேன்,
உங்களின் வீர வசனங்களும்
ஆதரவுக் குரலின் அதிர்வுகளும்
இன்னமும்
என் செவிப்பறைகளில்
ஒலித்துக்கொண்டு தான் இருக்கின்றன.

17. மனங்குமுறி

காலத்தின் ஊழிச் சிதைவுகளில்
நசுக்கி எறியப்பட்ட உரிமையின்
எச்ச சொச்ச குரல்கள் ஒலிக்கின்றன.

அதிர்ந்து அமைதி கொண்ட
எனது தேசத்தின்,
இரத்த வாடையின் வீச்சம்
இன்னும் இல்லாது போகவில்லை.

ஊனம் வடிந்த எலும்புக் கூடுகள்
நீள் புதை குழிகளில்
புதைக்கப்பட்டு நாட்கள் ஆகவில்லை.

துப்பாக்கிகளினதும் பீரங்கிகளினதும்,
வரவேற்போசை அதிர்வுகள்,
இன்னமும் பயணிக்கின்றன
காலங் கடந்தும்.

அவஸ்தையில் தவறி விழுந்த,
சிசுக்களின் ஆன்மாக்கள்
எதையோ அவாவி நிற்கின்றன.

அமைதி திரும்பி விட்டதாய்
எல்லோரும் சொல்லிக்கொள்ள,
நான் இன்னமும் கைதிதான்.

எனது கண்ணீருக்கும் செந்நீருக்கும்,

எந்தப் பெறுமானமும் இல்லையென்று
யாரோ விதி வரைந்து விட்டார்கள்.

மதியும் தோற்றுப்போய்,
சதியும் தோற்றுப்போய்,
நான் அனாதையான போது,
ஆறுதல் சொன்னவர்கள் எல்லோரும்
மொத்தமாக அடிமையாக்கப்பட்டுப் போயினர்.

எனது கண்ணீரைத் துடைப்பதென்று
உறுதிமொழி கூறிக் கொண்ட
வெள்ளைச் சட்டைக்காரர்களும்,
வார்த்தைகளால் அதிர்ந்து
ஆவேசமாய் சரித்திரம் படைத்து,
சுதந்திர தேசத்தில் கொடியேற்றி
கற்பனைகளில் காவியம் படைத்த
தலைவர் பெருமக்களும்,
வெட்கம் இல்லாமல் புரியாணி சாப்பிட,
சூறையாடப்பட்ட எல்லாவற்றையும்,
நினைவுத் திரைகளிலிருந்தே
தூக்கியெறிந்து விட்டு,
எஞ்சிய உயிரைப் பற்றியபடி நான்...

உடம்பு அலைந்து கொண்டிருக்கின்றது,
சந்தேக நபராய்
தீவிரவாதியாய்
பயங்கரவாதியாய்
பல பெயர் சுமந்து.

மொத்தத்தில்
அநாதரவற்ற அகதியாய்,
முகாம் முகாமாக
சிதைக்கப்பட்ட வாழ்வு,
இன்னமும் எதையோ எதிர்பார்த்தபடி
நம்பிக்கையுடன் காத்திருக்கின்றது.

18. வாழ்வதிலும் பார்க்க

நாளையோ நாளை மறுநாளோ
எனக்கும் ஒரு விடியல் கிட்டுமென்று,
ஏமாற்றங்கள் சுமந்து சுமந்து

களைத்துப்போன மனது,
ஆத்திரப்பட்டுச் சொன்னது
வாழ்வதிலும் பார்க்க சாவது மேல்.

“விதி வரைந்த பாதையில்
வாழ்வென்றால் வாழ்வோம்
சாவென்றால் சாவோம் “
எவ்வளவு உறுதியுடன் எடுத்துக்கொண்ட மொழி.

கொல்பவன் வெல்வான்,
வெடிகுண்டுகளின் எதிர்முனை
எதிரியின் பக்கம்
நோக்குகையில்,
தலைவனாய் நின்று போதித்தது,
அப்போதெல்லாம் சாவு இனித்தது!
ஆனாலும் வாழ்வு கசக்கவில்லை!

என் தேசம் பற்றியும்
எனது எதிர்காலம் பற்றியும்
எதிர்வு கூறப்பட்ட கனவுகள்,
எனக்குள் விதைத்தது
வாழ்வதிலும் பார்க்க சாவது மேல்,

அப்போது வாழ்வின் மீது பற்று இருந்தது, மனது
களைத்து போகவில்லை
தெம்பு கூடுதல் வீச்சில்...

சித்திரவதை கூடங்கள்
முகாம்களாக பரிமாணம் பெற்று,
முட்கம்பிகளால் போர்த்தப்பட்ட போது
உயிர் வாழ உணவும் நீரும் அளிப்பது,
எதிரிக்கும் கூட நிர்ப்பந்தமாயிற்று.

மனிதாபிமானம் என்று
அதற்கு பெயர் சூட்டி மகிழ்ந்த போது
நான் உயிரோடு பிணமாகினேன்,
அப்போதெல்லாம்
வெடிகுண்டாய் மாறிச் சாக
கனவு கண்டு சோர்வுற்றேன்,
சாவின் மீது பற்றிருக்கவில்லை
சாவதில் பெருமையும் இருக்கவில்லை,
வாழ்வதில் பிடிப்பும் இருக்கவில்லை,

நொந்து போன வாழ்க்கைக்கு
நிரந்தரத் தீர்வாய் இப்போதெல்லாம்..,
அடிக்கடி மனது சொல்கிறது,
வாழ்வதிலும் பார்க்க
சாவது மேல் என்று.

19. மீள்வருகை

உனது எல்லா எதிர்பார்க்கைகளும்
காற்றோடு சங்கமித்து
வீர ஆத்மாக்களுடன் ஐக்கியமாகிட்டு
மலை முகடுகள்
பரந்த வான் வெளி
பாயும் நதி
சலசலப்பில்லாத தென்றல்,

எனது வருகையை உணர்ந்துகொள்
உயர்ந்தோங்கி வளர்ந்த மரங்களிடையே காற்றின்
அசைவுகளோடு,
நான் சொல்லிக்கொண்டிருக்கும் செய்தி
இத்தனைக்கும்
உனது செவிப்பறைகளை
அடைத்திருக்க வேண்டும்.

மனதைத் திடப்படுத்தி
அமைதியை உள்வாங்கியபடி உற்றுப்பார், எனது
வருகை
உனக்குப் புலப்படக்கூடும்.

20. மன்னிப்பீர்களாக

பாங்கோசை இழந்த

பள்ளிவாயல்களின் சொந்தக்காரர்களே!
எங்களை மன்னித்து விடுங்கள்.
துடைத்தெறியப்பட்ட வாழ்வுக்காகவும்
பறித்தெடுக்கப்பட்ட உயிர் உடைமைகளுக்காகவும்
சூனியமாக்கப்பட்ட எதிர்காலத்திற்காகவும் மனதார
கேட்கப்படும் மன்னிப்பு இது.

இரத்தத்தினால் அபிஷேகம் செய்யப்பட்ட
பள்ளிவாயல்களின் சொந்தக்காரர்களே!
எங்களை மன்னித்து விடுங்கள்
துப்பாக்கிச் சன்னங்களோடு உறவாடி,
தொழுகையில் உயிர் பிரிந்த புனிதர்களுக்காகவும்
சந்தைகளிலும் வீதியோரங்களிலும்
பறிக்கப்பட்ட உயிர்களுக்காகவும்
மனதாரக் கேட்கப்படும் மன்னிப்பு இது.

வெடியோசைகளில் சங்கமமான
உயிர்களின் சொந்தக்காரர்களே!
எங்களை மன்னித்துவிடுங்கள்
களைந்து போன நித்திரைக்காகவும்
பிரிந்து போன உயிர்களுக்காகவும்
ஊனமாக்கப்பட்ட உடலங்களுக்காகவும்

உளமாரக் கேட்கப்படும் மன்னிப்பு இது.

பாதையோரங்களில் சிந்தப்பட்ட
குருதியின் சொந்தக்காரர்களே!
பரிதாபமாக உயிர் நீத்த ஹாஜிகளே!
உங்கள் எல்லோரினதும் ஆத்மாக்கள்
சாந்தியடைந்து புனிதமாகட்டும்.
எங்களை மன்னித்து விடுங்கள்,

உயிர் பிரியும் தறுவாயில்
எங்களுக்கெதிராக
நீங்கள் விட்ட சாபங்களின் அறுவடை
மிகக் கொடுமையானது,
அதன் வீச்செல்லை அதீதமானது,
அதன் காவுதிறன் கனதிமிக்கது,
மனப்பூர்வமாகக் கேட்கப்படும்
மன்னிப்பு இது.

சிற்றிழப்பாயினும் பேரிழப்பாயினும்
என்னால் விளைந்த அத்தனைக்காயும்
இனிமேலும் என்னை குற்றம் சொல்லாதீர்
உளாங்கனிந்து மன்னிப்பீர்களாக,

வார்த்தைகளால் சுட்டுத்தள்ளி,
உணர்வுகளால் காயப்படுத்தி,
வதை செய்து என்னைக் கொன்று
இனியும் இனியும் சங்கடத்தில் ஆழ்த்தி,
கைசேதங் கொண்டு அலையச் செய்யாதீர்
எல்லாவற்றுக்காகவும் மன்னிப்பளிப்பீர்.

இந்தத் தேசத்தில் ஓசை கேட்கட்டும்,
அது கரங்கள் எழும்பும் பேரோசை
இரண்டு கரங்கள்
இணைந்தெழுப்பும் ஓசை

ஒன்று எனது கரம்,

மற்றையது உனது கரம்,
அதிர்ந்து தட்டட்டும்
புதிய சங்கீதம் பிறக்கட்டும்
பேரதிர்வுகள் சுமந்து
தேசமெங்கும் பரவட்டும்.

உனக்குமெனக்குமாயும்
ஒரு சுதந்திர தேசத்தை
கட்டமைக்கும் கனவுகளுடன்,
நாளைய நமது சந்ததிகளின்
புன்னகையில் அது மலரட்டும்.

21. ஒரு பிடி மண்

யுத்தம் முடிந்து போயிற்று

தீவிரவாதிகள்
தோற்றுப் போயினர்,
பயங்கரவாதிகள்
அழிந்து போயினர்,
மனிதக் கேடயம்
பாதுகாக்கப்பட்ட
சுதந்திர தேசமிது.

முள்ளிவாய்க்கால்
முற்றுப்புள்ளி வைத்தது,
நந்திக் கடலோடு
எல்லாமும் சங்கமம்,
பட்டாசுக் கொளுத்தி கொண்டாட்டம்
எனக்கு மனது நிறைந்திருந்தது.

அன்பர்களே! தோழர்களே!
இனி இது ஒரே தேசம்!
எல்லோரும் ஒரே மக்கள்
ஒரு தாய் மக்கள்,

எங்கள் தலைவர்
உரத்துச் சொன்னார்
உலகமெல்லாம் அது எதிரொலித்தது.

எனக்கு ஒரு பிடி
மண் வேண்டும்,
அதை பிச்சையாய் தாருங்கள்,
விடுவிக்கப்பட்ட
முள்ளிவாய்க்காலிலிருந்து...
இரசாயண பகுப்பாய்வுக்காக,

22. பின்னால் பொதிந்திருப்பது

தளைப்பதற்காக வெட்டப்பட்ட
இந்த மரத்திற்கு
புரிந்து கொள்ளப்படாத கதைகள்

நிறையவே இருக்கின்றன.
அவைகளை உரத்துச்சொல்ல
எனக்குக் குரல் இல்லை,
அவைகளை அழுத்திச் சொல்ல
எனக்கு அதிகாரமுமில்லை
நான் சொல்லாவிட்டாலென்ன!
யாராவது சொல்லி வைப்பார்கள்.

மரம் கூட தானாக முளைக்கவில்லை
யாரோ எதற்காகவோ போட்ட விதை
பெரு விருட்சமாய் அகல கிளை பரப்பிற்று,
நிர்ப்பந்தத்தில் அதன் வளர்ச்சி,
இரத்தமும் சதையும் கண்ணீரும்தான்
அதன் இருப்பை உறுதிப்படுத்திற்று.

வலுக்கட்டாயமாக வெட்டப்பட்ட போது,
தளைக்கும் என்ற நம்பிக்கையுடன்தான்
வீழ்ந்து போனது.

எல்லாவற்றையும் எதிர்கொண்டு வென்று
தோற்றுப்போனது கூட
நிர்ப்பந்தத்தின் மறுகோணம்.

எல்லோருக்கும் பிடித்த வளர்ச்சி,
எதிரிக்கும் பிடித்துப் போக நியாயமில்லை அதிக
வளர்ச்சியை அங்கீகரிக்க
அவனால் எப்படி முடியும்?

எனது ஒரு கண் போயினும்,
உனது இரு கண்களும் போக வேண்டும்.
வீழ்ச்சியை அவாவி நின்ற மனதுகள்
மகிழ்ச்சியாக வாழ்த்துச் சொல்கிறது பார்.

திரை மறைவில் நட்பு பாராட்டி
நம்பிக்கையூட்டிய கரங்கள்,
எதிரியுடன் குலுக்கி கொள்கின்றன பார்.
நட்பு என்ற பெயரில்
உதவி என்ற பெயரில்
ஆதரவு என்ற பெயரில்
எதிரி பல உருவங் கொண்டான்.

ஏலவே வெட்டப்பட்ட கிளைகளால்

போடப்பட்ட பிடிகள்தான் கத்தியில்,
உனது கை கொண்டு
குத்தப்பட்ட உனது கண்கள்,
இப்போது புரிந்திருக்கும்,
கைகளுக்கும் கண்களுக்கும்,
எதிரியால் போர்த்தப்படும்
பொன்னாடை
அழகான ஆபத்தென்று.

வெட்டி வீழ்த்தப்பட்ட போது,
எதிரொலித்த அவலக் குரல்கள்
காற்றோடு சங்கமித்து
மறைந்தே போயின.
இனி ஒருபோதும் மீட்டப்பட முடியாது.

அடிக்குறிப்புகளை எழுதிவிட்டு,
எல்லாம் ஓய்ந்த போது
பூனைக்கு மணி கட்டுவது யார்?
ஓராயிரம் பூனைகள் அணி வகுத்து

மரத்தையே வெறித்துப் பார்க்கின்றன.

வெட்டப்பட்ட மரத்தின்
தயாரிக்கப்பட்ட கிளைகள்
இனி அது பசுமை பேசும்.
அதில் நிறைய உள் நோக்கமும் இருக்கும்
அனைத்தையும் பார்த்த படி
அமைதியாக இருப்பதை தவிர,
வேறெந்த தெரிவுகளும் கிடையாத படி
நீண்ட கண்காணிப்பின் கீழ்,
வெட்டப்பட்ட மரம்
கைதியாக வாழ்கிறது.
தளைத்து விடக் கூடும் என்று
அவனுக்கும் தெரிந்து போயிற்று போல.

23. யாரைக் குற்றம் சொல்ல

மூன்று தசாப்தங்களுக்கு மேலாய்,
புரையோடிப் போன யுத்தம்
முடிவுக்கு வந்தாயிற்று,
விடுவிக்கப்பட்ட தேசத்தில்
இனிச் சுதந்திர மழை எங்கிலும்,

ஆனந்தத்தோடு கொண்டாடி மகிழ
வெற்றித் திருவிழா வேறு.

ஒன்றையும் சகிக்க முடியவில்லை,
பயங்கரவாதிகளின் எச்சம்
இன்னமும் உயிர்ப்போடு இருக்கிறது,
தீவிரவாதமும் முற்றுப் பெறவில்லை,
அனைத்தையும் அடக்கிப்போட
அது நல்ல வாசகம்.

கழுதைகள் சுவாசிக்கும்
“ஏசி காற்று“ பற்றியும்,
மானங்கெட்டவர்கள் சாப்பிடும்
பாராளுமன்ற பிரியாணி பற்றியும்
மழையில் நனைந்து
வெயிலில் காயும்
அவனுக்கெங்கே தெரியப் போகிறது?

அறிக்கைவிட்டு

அமர்க்களப்படுத்தி
மேலும் மேலும் தேங்காய் அரைத்து,
மடையனாக்கப்பட்ட குடிமகனுக்கு
நூற்றுக்கு மேல்
தலைவர்கள்
வீராவேமாய்
கொள்கை பேசும் தலைமைகள்,

ஒரு நேரச் சோற்றுக்காயும்
மழைக்கும் வெயிலுக்கும்
ஒதுங்கிக் கொள்ள ஓரிடத்திற்காயும்
மனுப் போட்டே அலுத்துப் போன
அந்தப் பாமரன் பாவம்.

கோடிகளில் புரளும் அபிவிருத்தி
கேடிகளுக்கு பால் வார்க்கும் அமுதசுரபி,
மனுப் போட்டவனுக்கு
தஞ்சம் மரத்தடிதான்,
அதுவரைக்கும் கொழுத்த லாபம்
சம்பாதிக்கும் குறியீடு இழக்கப்பட
யாருக்குத்தான் இஷ்டமுண்டு?

விடுவிக்கப்பட்ட தேசத்தின்
வெற்றிவிழா விமர்சை கட்டும்,
இன்றில்லாவிடினும்
விரைவில் ஒரு நாள்,
நமது தலைவர்களும்
மேடையின் முன் வரிசையில்
பல்லுத்தெரிய இழித்தபடி
போட்டோவுக்கு போஸ் கொடுக்க
நீயும் அதைப் படிப்பாய்,
முன்பக்கப் பத்திரிகைச் செய்தியாய்
காலாகாலத்திற்கது
மக்களுக்கான மாற்றம்.

யாரைக் குற்றம் சொல்ல?
வெட்கங் கெட்ட
உன்னையும் என்னையும் விட்டுவிட்டு
யாரைக் குற்றம் சொல்லி என்ன பயன்?

எல்லாவற்றுக்கும் இனி
ஒற்றைக் குறியீடு
நீயும் நானும் தான்.

24. உன்னால் முடியாது

எனக்குத் தெரியும்
இனி உன்னால்
எழுத முடியாது,
இனியொரு போதும்
நீ எழுத மாட்டாய்,
உனது பேனா மை தீர்ந்தும்
காகிதங்கள் விட்டுப் போயும்
வெகு நாட்களாகிவிட்டது.

துப்பாக்கி சுமந்து

அவன் நிற்கும் போது,
கத்திக் கத்தி நீர் வற்றிய தொண்டை
இப்போது மொத்தமாக
அடைத்துக் கொண்டு விட்டது போலும்,
இனி நீ
எழுதவும் மாட்டாய்
பேசவும் மாட்டாய்
அது உன்னால் முடியவே முடியாது.

உன் இயலாமையை
உரத்துச் சொல்லி
ஒப்புக் கொள்,
வார்த்தைகளுக்கா பஞ்சம்?
அடக்குமுறைக்குள் நாம்
அமிழ்த்தப்பட்டுவிட்டோம்,
பேனைகள் பிடுங்கப்பட்டாயிற்று,

குரல்வளையை நசுக்கியபடி
பேரினவாதக் கரங்கள்,

இப்படி எத்தனை எத்தனை காரணிகள்?
ஆடத்தெரியாதவனுக்கு மேடை பாழ்
ஆடத் தயாரில்லாதவன்
மேடையே கிடையாது என்பதில்
தப்பில்லைதான்.

நீ சொன்னால்
நம்பித்தானே ஆக வேண்டும்,
உனது பலவீனங்களை மறைக்க
அழகானதோர் ஆடை, பேரினவாதம்.
எல்லோரும் நம்பி விடுவார்கள்
நீ சொல்வதைத்தானே
நம்பியாக வேண்டும்.

மரணத்திற்குப் பயந்த கோழையே!
மாவீரம் பற்றிய உனது பாடல்
வீரச்சாவு பற்றிய உனது கதைகள்
தேசம் பற்றிய உனது கவிதைகள்
எல்லாம் அப்படியே,
உணர்ச்சிப் பிரவாகத்தோடு...
எத்தனை ஆவேசமாய்
எழுதிக் குவித்தாய்.

காவுகொள்ளப்பட்ட உயிர்களுக்காயும்
தோற்றுப் போன வீரனுக்காயும்
ஒரு இரங்கற்பா எழுத
உன்னால் முடியாமற் போயிற்றே!
மகா கோழை நீ,
தைரியமாக வேசம் போட்டவன்.

எனக்குத் தீராத கவலை தந்து
இதயத்தைக் கனக்கச் செய்து
கண்களைக் கலங்கச் செய்து
என்னைப் பாடாய்ப்படுத்திய
உனது எழுத்துக்கள்
தேசங் கடந்து உரத்து ஒலித்தன.

பலி கொள்ளும் படலம்
ஓய்ந்த போது,
வெஞ்சம் தெரிக்கும்
உன் எழுத்துக்கள்
எப்போது வருமென ஏங்கித் தவித்தேன்.

எல்லாவற்றுக்குமாய் மன்னித்து விடு,
ஒரு தொடைநடுங்கியை
ஆகர்ஷன புருஷனாக
கற்பிதம் கொண்டதற்கும்,
ஆராதித்து ஆனந்தமடைந்ததற்கும்
தயவு செய்து மன்னித்து விடு.

அடிக்குறிப்பு:
உனக்குப் பிரச்சினையொன்றுமில்லையென
கண்டுகொள்ளும் போது
வீராவேசமாக நிச்சயம் எழுது.
என்னைப் போல
ஏமாந்த உணர்வாளன் ஒருவன்
நிச்சயம் படிப்பான்.

25. மீண்டும் ஒலித்தல்

உயர்ந்த தொனியில்
ஒலித்தோய்ந்த பாடல்,
மீண்டும் ஒலிக்காதா என்று
ஆவலைத் தூண்டிவிட்டு
ராகமிழந்து போயிற்று.

நசுங்கித் திணறி
பிரிந்த உயிர்கள் போல,
அவஸ்தைகளுடன் சுருதியிழந்து
கோர்க்கப்பட்ட வார்த்தைகளும் கூட
பெறுமானமிழந்து போயிற்று.

நுட்பமாகக் கணிக்கப்பட்ட
அதன் தரத்தில்
குறையேதுமில்லைதான்,
கையாளப்பட்ட சொற்கள்
யாருக்கோ சொந்தமானது.

அர்த்தங்களை யாரோ கற்பிக்க
அமைதியாகச் செவிமடுத்தல்
நிர்ப்பந்தமாயிற்று,
யாரோ முணுமுணுக்கின்றார்கள்
சரணமோ? பல்லவியோ?
பாடல் உயிர்ப்பு பெறுவதாய் அர்த்தம்.

வெளிப்படுத்தலின் முன்னறிவிப்பு
வசப்படாத வார்த்தைகளை விட்டுவிட்டு,
ஏதோவொரு ராகத்தில்
அப்படியாயின்,
பாடல் மீண்டும் ஒலிக்கும்
சற்று தாமதித்து.

26. ராஜதந்திர விளையாட்டு

நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகளை
மீண்டும் உன் மன்றிற்கு
சமர்ப்பிக்கிறேன்.

திரும்பவும் நீ
நிராகரிப்பதற்காக.

சமர்ப்பிப்பதால் நானும்
நிராகரிப்பதால் நீயும்
தொடர்ந்தும் திருப்தி படுத்தி விடுகிறோம்,
நமது மக்கள் பெருமான்களை.

ஆடு இல்லாவிட்டால்
மரக் கன்றுக்கு எதற்கு கூடு?
புலியும் சிங்கமும் இல்லாவிட்டால்
மானுக்கெதற்கு ஜாக்கிரதை?
பிரச்சினை இல்லாமல்
உன்னாலும் என்னாலும்
வாழ முடியுமா தெரியவில்லை.

கேட்பது எனது ராஜதந்திரம்,
மறுப்பதும் பரிசீலிப்பதும்
உனக்கேயுரித்தான ராஜதந்திரம்,
மறுத்தபோது கொதித்தெழுவதும்,

கொதித்தெழுந்த போது
நீ சமாளித்துவிடுவதும்,
அற்புதமான விளையாட்டுத்தான்.

நமது விளையாட்டுக்களின் நுட்பம்
மகாஜனங்களுக்கு புரியப் போவதில்லை, உனது
அறிக்கை
உனது மக்களையும்,
எனது அறிக்கை
எனது மக்களையும்
திருப்திப்படுத்திவிடும்,
என்ற நம்பிக்கை
இருப்பது போதும்.

உனதும்
எனதும் வாழ்க்கை
இந்த விளையாட்டுக்குள்தானே
தங்கியிருக்கிறது,

நமக்குத் தெரிந்த ரகசியத்தை
இப்போதைக்கு மட்டுமல்ல,
எப்போதைக்கும்
எப்-போதையிலும்
யாருக்கும் சொல்ல வேண்டாம்.

புதிய நம் வாரிசுகளை
இதே தளத்தில் பயிற்றுவித்து,
வித்தைகளிலும் நுட்பங்களிலும்
அவர்கள் தேறிவிட்ட பின்னர்,
நைல் நதிக் கரையில்
நானும் நீயும்
ஓய்வெடுப்போம்.

விளையாடிக் களைத்த ராஜதந்திரிகளுக்கு
தொந்தரவில்லாத ஓய்விடம்
நைல் நதிக் கரை.

27. தலைவன் சொன்னான்

புயல் மையங் கொண்ட போது
போர் மேகம் சூழ் கொண்ட போது
தலைவன் சொன்னான்.

“புயலை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்
மாவீரர்களாய் மண்ணில் மடிய,
அஞ்சா நெஞ்சர்களே!
அணிதிரளுங்கள்”

துப்பாக்கிகள் வெடிக்கத் தொடங்கின,
அது ஒரு சூராவளி போல
சுழன்றடித்து உச்சம் கொண்ட போது,
வெற்றி அன்றில் வீர மரணம்,

எல்லா யுத்த தந்திரங்களும் பொய்த்து
மாவீரம் மக்களைத் தழுவி,
எல்லாம் ஒன்றாகி குருதியில் மூழ்கி
உயிர் மூச்சு - அவஸ்தைகளுடன்
பிரியாவிடை பெற்றுச் செல்ல,
எல்லோரும் தலைவன் முகம் பார்த்தனர்.

அதில் குழப்பமில்லை, சங்கடமில்லை

வீரம் சொட்ட, அமைதி கொண்டிருந்தது,
கடைசியாக அவன் வாய்திறக்க
அவாக் கொண்ட காத்திருப்பு.

“நீங்கள் எல்லோரும்
நன்கு தீட்டப்பட்ட
கூர்மையான கத்திகள்
உங்களை மண்ணில் விதைக்கிறேன்
மங்கிப் போவதும் பளிச்சிடுவதும்
காலத்தின் போக்கில்
நீங்கள் தீர்மானிப்பது”.

“மாவீரம் சுமக்கப் போகின்றவர்களே!
எனதருமை மக்களே!
ஆயுதப் போர் முடிவடைகிறது
ஆயுதப் போர் முடிவடைகிறது”.

சலனமில்லாத ஒளி வீச்சு
உயிர் ஓசைகளில் பட்டு
சாந்தமாக விடைபெறும் பொழுதுகளில்
உறுதி உச்ச வீச்சு

பிலுக்குப் பிறக்கமற்றுத் தெரித்தது.

புயல் மௌனம் பேசியது,
சூறாவளி மலர்களை
மென்மையாய் முத்தமிட
தென்றல் குழம்பிப் போனது,
எல்லாம் அமைதி கொள்ள
தலைவன் சொல் அதிர்வுகள் சுமந்து
தேசங்கடந்து பயணித்தது.

தீட்டப்பட்ட கத்திகள்
பளிங்குபோல் பளிச்சிட்டு
ஒளியூட்டும் என்ற எதிர்பார்ப்புகளோடு
காலம் மௌனமாய்க் கரைகிறது.

28. மௌனப் போரும் புன்னகை ஆயுதமும்

அமைதியாகத் தொடரும் ஆக்கிரமிப்பு
அமாவாசையில் தீட்டப்பட்ட திட்டம்,
அது அப்படித்தான் இப்போதைக்கு ஜொலிக்கிறது.
சூரியஸ்தமனத்தில் வீரியம் பெறும்
கொள்கை கோட்பாடுகள்,
விடியலோடு மௌனம் போர்த்திக் கொள்ளும்.

ஒரு பாம்பின் நகர்வு,
பதித்திருப்பது ஒற்றைத்தடம்,
சத்தமில்லாத நகர்வுகளுக்கு பின்னால்
பொதிந்திருக்கும் அர்த்தங்கள்
அவ்வளவு எளிதில் புலப்படாது,
எஞ்சியிருக்கும் தடயங்கள்தான் சான்று.

புயலுக்கு முன்னரும் பின்னரும்
நிலவுகின்ற அமைதி சொல்லும் செய்தி
மிகவும் கனதியான அர்த்தம் பொதிந்தது.

தேசப்படத்தில்
எல்லைகளுக்கு இடப்படும்
புதிய கோடுகள்,
தசாப்தங்கள் கடந்து
அடிமையாக்கும் கை விலங்குகள்,

மௌனமான மாயப் பரப்பினுள்

சிதைக்கப்பட்ட பாரம்பரியங்கள்
எஞ்சியிருப்பதும் ஆச்சரியம்தான்,
துப்பாக்கிகள் தூங்கிக்கொள்ள
பேனைகள் விழித்துக் கொண்டன!
சத்தமிட்டு அடக்கிவிடுவது
அராஜகமாகி விடுவதனால்தான்,
புன்னகைத்து அடிமையாக்கும் வினோதம்
அன்றாடங்களில் சங்கமித்து விடுகிறது.

ஒருவருக்கும் தெரியாத புதிய பாஷை
ஏற்படுத்தப் போகும் ஈர்ப்பும்,
உளமாற அள்ளித் தெளிக்கப்படும் அன்பும், ஆறத்
தழுவியபடி சொரியப்படும்
புன்னகையும்,
கண்ணீரைத் துடைத்து விடும் கரங்களும்,
ஆறுதலுக்காய் வீசப்படும் சொற்களும்,
பெயர்த்தெடுக்கப்பட்டு கட்டமைக்கப்பட்டவை.

ஒரு மாலைப் பொழுதிற்குள்
ஈர்த்தெடுத்த மனங்களை,
போலியாய் புனையப்பட்ட
பாசக் கயிற்றினால்

எப்போதைக்கும் கட்டிப்போட்டிட வேண்டாம்.

“நாளைகள் உனக்கில்லை
இன்றுமட்டுமே உனக்கானது”
யாரோ சொன்ன தத்துவம் உண்மைதான்!
இன்றைய புன்னகைகள்
நாளைய உனது விரோதிகள்,
இன்று உனக்குச் சாவு
நாளை உனக்கு அழிவு,
இன்றுகளும் நாளைகளும்
இப்படித்தான் செய்தி சொல்கின்றன.

எல்லா யதார்த்தங்களையும் தாண்டி
இன்று அடிமையாக்கப்பட்ட போதில்,
நேற்றைய அந்த விரோதி
நாளை உரத்துச் சொல்வான்,
“விரைவில் எல்லோருக்கும் விடுதலை” என்று
அப்போதும் கூட
மானங்கெட்ட கரங்கள்,

மரத்துப் போன மனது அமைதிகாக்க
கண்ணீரைத் துடைக்க நீளும்.

புல்லரித்துப் போய் புதிரோடு
பார்த்துக் கொண்டிருப்பதை தவிர,
தெரிவுகள் ஒன்றுமே இல்லாத
சூனியப் பகுதியொன்றில்,
மௌனமான அந்தப் போர் தொடரும்
புன்னகை ஆயுதங்கள் சுமந்தபடி.

29. இனி அப்படித்தான்

பயங்கரவாதிகளிடமிருந்து
விடுதலையும் பாதுகாப்பும்,
தேசிய வீரன்
நெஞ்சுயர்த்தி விறைப்பாக நின்று

“சல்யூட்” அடித்தான்,
வெற்றி வெறி அவன் கண்களில்
பளிச்சிட்டுப் பிரகாசித்தது,
அவன் வீரப் பிரகடனம் செய்தான்
தேசமே அவனுக்குத் தலை வணங்கியது.

ஆடு நனைவதில்தான்
எத்தனை கோடிக் கவலை
ஓநாய்க் கூட்டத்திற்கு!

இனி துப்பாக்கிச் சப்தமில்லை,
செல் வீச்சு அச்சமில்லை,
“பங்கர்” வாழ்க்கைக்கு விடுப்பு,
பீரங்கிகளுக்கு நெடிய ஓய்வு,
எல்லாமும் காட்சிப் பொருளாக
இனி அப்படித்தான்
தேசத்திற்கு மகுடம் சூட்டப்படும்.
பாவம் ஓநாய்கள.
மிக அண்மித்துக் கண்ணீர் வடிக்கின்றன ஆடகள்
மீதான பரிதாபத்தில்.

30. இன்னும் புரியவில்லை

சொல்ல முடியாத வேதனைகளையும்
வெளிப்படுத்திட முடியா உணர்வுகளையும் தேக்கி
வைத்திருக்கும் நெஞ்சு
வெடித்து விடுமாப் போல் பதறுகிறது,
என் பதற்றத்தின் வீரியம்
யாருக்கேனும் புரிகிறதா?
ஆறுதலாய் இரண்டு
வார்த்தைகள் சொல்லுங்கள்.

மெல்ல மெல்லக் களைந்து போன
போர் மேகங்களும்,
சிறிது சிறிதாய் ஓய்ந்து போன
யுத்த மழையும்,
உடலையும் உள்ளத்தையும்
அதிர்ந்து சிதறச் செய்த

துப்பாக்கி சங்கீதமும்,
ஓய்வு நிலைக்கு வந்தாயிற்று.

இன்றைகள் பற்றிய ஏக்கமும்
நாளைகள் பற்றிய எதிர்ப்பார்ப்பும்
நேற்றைகளின் கவலையினுள்
மொத்தமாக அமிழ்ந்து போயிற்று.

யார் யாரோவெல்லாம் சப்தமிட்டார்களாம்! அவை
எனக்கான ஆதரவுக் குரல்களாம்,
பூரித்துப் போனவர்கள் சொன்னார்கள்.

கோசங்களோடு முற்றுப்பெறும்
உணர்வுத் துளிகளுக்கு
பரிதாபமான எனது வணக்கங்கள்.

தேச எல்லைகள் கடந்து
ஒலித்த உரிமைக் குரல்கள்

இன்னும் ஓய்ந்து போகவில்லை.

குரல்வளையை நசுக்கும் கரங்களும்
எல்லைகள் தாண்டி நீண்டு கொண்டேயிருக்கும்
நேற்றைகள் பற்றிய பயத்தோடும்
இன்றுகள் பற்றிய குதூகலிப்போடும்
நாளைகள் பற்றிய எச்சரிக்கையோடும்.

குருவிக்கூடு களைத்து
இன்புறும் மனதுகள்
கருணைக்கான மனுக்களை
கட்டாயம் ஏற்றுக்கொள்ளும்!
பார்த்துக்கொண்டே இருங்கள்
விரைவில் தீர்வு கிட்டும்!!
பார்த்துக் கொண்டே இருங்கள்!!!

31. ஒற்றைத் தெரிவு

விடுதலை என்று
வாய்த்திறக்காதே
உனக்கென்ன விடுதலை இருக்கிறது?
நீ பயங்கரவாதி !

உரிமைகள் பற்றி
மூச்சுக் கூட விடாதே
நீ யார்?
உனக்கென்ன பூர்வீகம் இருக்கிறது?
விஜயனிடமும் தோழர்களிடமும் கேள்.

எனது பிறப்பும் வளர்ப்பும்
வாழ்வும் மரணமும்
இந்த மண்ணில்தான்,
எல்லா உரிமைகளும்
எனக்கு மட்டுமேயானது
என்னிடம் உரிமை கேட்க
தீவிரவாதி உனக்கு உரிமையில்லை.

நாய் எவ்வளவு குரைத்தாலும்
கொடுப்பதைத்தான்
சாப்பிட்டாக வேண்டும்,
குறை வயிற்றோடும்
பசியோடும் இருந்தாலும்,
கொடுத்தவைக்காக வாலாட்டும்-அது
வெறுப்போடாயினும்
நன்றியோடுதான் என்பது அர்த்தம்,

எனது வீட்டு எல்லை தாண்டி
தெரு நாய்களோடு
உனக்கென்ன சகவாசம்?
தடைசெய்யப்பட்ட உறவுகள்
உனக்கு அவசியமில்லை.

நீ - எது செய்தாலும்
உனக்கு எது செய்யப்பட்டாலும்
அடக்கி விடவும்

உன்னைப் பாதுகாக்கவும்
என்னிடம் ஆயுதம் இருக்கிறது,
அது தீவிரவாத தடைச்சட்டம்.
அவசியப்படுமெனில்
அவசரகாலச் சட்டமும் அமுலுக்கு வரும்.
நான் மட்டுமே உனது பாதுகாவலன்
என்னை மட்டுமே
நீ நம்பியாக வேண்டும்!

32. உனக்குமெனக்குமான வித்தியாசம்

உயிர்களோடு விளையாடி
உதிரத்தில் குளித்து மகிழ்ந்து
சிதைந்த உடலங்களோடு
சங்கமித்துக் கழிந்த பொழுதுகள்,
உனக்கு அதன் பெறுமதி பற்றி
சொல்லித் தராமல்தான் போயிற்று,
மனிதாபிமானத்தை உன்னிடம் எதிர்பார்த்தது எனது மடமைதான்.

உனக்குத் தெரிந்த பாசையில் பேச
எனக்கும் மிக நன்றாகத் தெரியும்,
உனக்குள்ள அங்கீகாரமும்
உன் சொற்களை உறுதிப்படுத்த
வசதியாய்ப் போயிற்று.

உனது அராஜகக் குரல் நீதமாயும்

எனது நீதமான குரல் அநீதமாயும்
முத்திரை குத்தப்படும் போது,
நான் மௌனமாவதைத் தவிர
தெரிவுகளேதுமில்லாது போயிற்று,
இன்னும் நம்பிக்கை இருக்கிறது
எனது குரலும் உனதை விட
பன்மடங்கு பலமாய் விரைவில் ஒலிக்குமென்று.

32. இரங்கற்பா

எத்தனை பெரிய சாம்ராச்சியம்!
எத்தனை பலமிக்க படைகள்!
அதிமதிநுட்பத் தயார்படுத்தல்கள்,
எல்லாமும் தோற்றுப்போயினவே!
தமிழ் ஈழத்தின் கதவுகள்
உடைத்தெறியப்பட்டுப் போயினவே!
எல்லாக் கனவுகளுடனும் சேர்த்தே.
ஒரு "ஹொலிவூட்" திரைப்படம் போல
வேகமான நகர்வுகளுடன் முடிந்து போயிற்றே!

சாம்ராச்சியத்தின் பெருந்தலைவா!
உனக்கென்னவாயிற்று ?
எத்தனை பெருஞ்சமர்களை சமாளித்தவன் நீ!
யார்யாரையெல்லாமோ நம்பி
எப்படி உன்னால் ஏமாற முடிந்தது?
உனக்கான கல்லறையை
எப்படியெல்லாம் கனவு கண்டிருந்தேன்!

தூவிய மணற்றுகள்கள்
நிலமடைய முடியா ஜனத் திரளில்
உனக்கான இறுதியஞ்சலியும்,
உலகின் எல்லா அலைவரிசைகளும்
ஒன்றாய்த் திரண்டு நேரஞ்சல் செய்ய,
உனது வீரச் சாவை கொண்டாடியபடி
கண்ணீரோடு ஒரு பிடி மண்போட
கொடுத்து வைக்கவில்லையே!
உனது உடல் விதைக்கப்படாமலேயே
இத்தனை கொடூரமாய் செயற்பட

எதிரிக்கு அவகாசமளித்து...

உன் வீரச்சாவு
மகிழ்ச்சிக் கொண்டாட்டமாய்
பட்டாசு கொளுத்தி இனிப்பு பறிமாறி
எத்தனை அவமானமாய்ப் போயிற்று...
கனத்த இதயத்தோடு பொறுத்துப்போக
விழி கலங்கவே அச்சமாயிருந்தது.

மாவீரர்களே! மன்னித்து விடுங்கள் எம்மை,
சிதைந்து போன உங்கள் உடலங்களுக்கு
ஆயிரமாயிரம் அஞ்சலிகள்,
முள்ளிவாய்க்கால் இன்னமும் எமக்கு
தடை செய்யப்பட்ட பூமிதான்.

நீங்களும் தோற்றுப் போய்
எங்களையுந் தோற்கடித்து விட்டீர்கள்
ஆட்சி செய்ய வேண்டிய நாம்
கொத்தடிமையாக்கப்பட்ட போது
கவலைப்படக் கூட அனுமதிக்கப்படாது
தடுக்கப்பட்டுப் போயினோம்.

மாவீரர்களே!
உங்களைக் கல்லறைகளில் விதைத்து
வீரதீரம் சொல்லிப் பாட்டுக்கட்டி,
துயிலுமில்லங்களில் வலம் வரவும்
பெருமையோடு அமரர்களை நினைவு கூரவும்,
தளங்களேதும் இல்லாது போயிற்று,
நீங்களெல்லாம் துரோகிகளாக்கப்பட்டபோது
தலையசைப்பதால் உயிரேனும் எஞ்சியது.

எத்தனை ஆயிரம் வடிவங்களில்
யுத்தங்களை எதிர்கொள்கிறோம்!
தினம் தினம் செத்து வாழ்கிறோம்.

வார்த்தைகள் வீரம் சொட்ட
கூப்பாடும் கோஷமும் போட்டு
உணர்வுகளை உசுப்பிவிட்டு,
அடங்கிப் போகும் கோழைகளைத்
தலைவர்களாய்க் கொண்டிருப்பது
காலம் கொடுத்த
கொடூர தண்டனை,

இன்னும் எதிர்பார்ப்புகளுடன் இருக்கிறோம்
புதிதாய்த் தென்றல் வீசுமென்று.

34. பத்தோடு பதினோராவது இழப்பு

எனது பாட்டன் தந்தைக்காக இறந்தான்
தந்தை எனக்காக இறந்தான்
நான் மகனுக்காக இறப்பேன்
மகன் பேரனுக்காயும் பேரன் பூட்டனுக்காயும்
இறப்புக்களால் அலங்காரம் செய்வர்.

விதைப்பவைகள் வீண் போவதில்லை,
இழப்புக்களால் வித்தை காட்டுவோம்.
உயிரை அறுத்து மறு விதைப்பு செய்து,
மாவீரம் சொட்ட பாடலிசைப்போம்,
மீண்டும் மீண்டும் உச்ச தொனியில்.

ஒற்றையாய்த் தொடங்கி
உரத்துப் பாடுவோம்,
எல்லாவற்றையும் மறந்து விடுங்கள்,
எல்லாவற்றையும் மறந்து விடுங்கள்,
பத்தோடு பதினொராவது இழப்பு
இலகுவாய் எடுத்துக்கொண்டு
எல்லாவற்றையும் மறந்து விடுவோம்.
கவலையில்லை, குழப்பமில்லை,
பத்தோடு பதினொராவது இழப்பு,
நாளை விடிவது எனக்காகவே தான்!
நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்
தேசம் பற்றிய கனவுகளுடன்.

பின்னிணைப்பு 01



குருடர்கள்

யானை பார்த்த கதை

குருடர்கள் யானை பார்த்த கதை

இருபதாம் நூற்றாண்டின் இறுதித் தருணங்களில் பாடசாலை மாணவனாக இருக்கும் போது வகுப்பறையில் ஆசிரியர் சொன்ன கதைதான் இது. பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்த கதை. தெரியாதவர்கள் ஒருவராவது இருக்கக்கூடும் என்பதால் மீண்டும் ஒருமுறை இந்தக்கதையைச் சொல்கிறேன்.

குருடர்கள் சிலர் யானை பார்க்கப் புறப்பட்டார்கள். யானை பார்த்த பின்னர் அவர்கள் யானை எப்படியானது என்பதைப் பற்றி விவரணஞ் செய்தார்கள் ஒருவன் யானை சுவர் போன்றது என்றான், மற்றவன் அதை மறுத்து யானை சுளகு போன்றது என்றான். அடுத்தவன் இல்லை இல்லை யானை துடைப் பம் போன்றது என்றான். இப்படி ஆளுக்கொரு கதை. சுவர் போன்றது என்று சொன்னவன் ஸ்பரிசித்தது

யானையின் வயிற்றுப் பகுதியை, சுளகு என்று சொன்னவன் ஸ்பரிசித்தது யானையின் காதை, துடைப்பம் போன்றது என்று சொன்னவன் ஸ்பரிசித்தது யானையின் வாலை, எனவே எதையும் அரைகுறையாகப் பார்க்காமல் முழுமையாகப் பார்க்க வேண்டும் என்று கூறிய ஆசிரியர் புத்தி சொல்லத் தொடங்கினார். அவர் சொன்ன புத்திகள் எல்லாம் மறந்து விட்டன. ஆனால் யானைக் கதை மனதில் நின்று வம்பு செய்தது, அதில் எனக்கு நிறையக் குறைகள் தென்பட்டன பின்னர் அதை அப்படியே ஓரத்தில் போட்டு விட்டேன்.

புத்தாயிரம் பிறந்தது, 21ஆம் நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் களைகட்டின ஏதோவோர் பத்திரிகையில் யானைக் கதையை மீண்டும் படித்தேன். புத்தாயிரத்தை

எப்படிக் கொண்டாடவும் திட்டமிடவும் பயன்படுத்தவும் வேண்டும் என்று எழுதத் தொடங்கி இடையே யானைக் கதையும் இருந்தது, அவர் எழுதிய அனைத்தும் மறந்து விட்டது

யானைக்கதை மட்டும் மனதில் நின்றது. அந்தக்கதையில் ஏதோ சிக்கல் இருக்கிறது, அது என்ன என்பதை அந்நேரத்தில் உள்ளம் உணர்த்தியது, ஆயினும் சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்க மூளை தாயாரில்லாது இருந்தது.

2012ஆம் ஆண்டு பிறந்தது எனக்கு ஒருமுறை எஸ்.பொ வை படிக்க வேண்டும் என்று தோன்றியது கா.சிவத்தம்பி மரணித்த பின்னர் எஸ்.பொ வைப் படிக்கும் போது வித்தியாசமாக ஏதும் எனக்குத் தோன்றுகிறதா என்பதுதான் மனதில் அடிக்கோடிட்ட விசயம். அவரது எழுத்துக்களை உணர்வுடன் படித்தேன் அவை நிறையச் செய்திகளை என்னுள் விதைத்துச் சென்றன. தேவை: உண்மையின் உபாசகர்கள் என்ற அவரின் கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் அவரும் யானைக் கதை சொன்னார். வாசிப்பதை அப்படியே நிறுத்தினேன் மூளை யோசிக்க நீண்ட நேரத்தை ஒதுக்கித் தந்தது காரணம் நான் எஸ்பொவை நான் மீண்டும் படிக்கும் போது அது புதிய சூழல், இலங்கையின் ஆயுத விடுதலைப் போராட்டம்

தோற்கடிக்கப்பட்டு அபிவிருத்தியென்ற முழக்கம் ஓங்கியொலித்துக் கொண்டிருந்தது.

நான் சிறைச்சாலையில் இருந்தேன். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்வதற்காக சர்வதேசத்தின், குறிப்பாக இந்தியாவிலுள்ள தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்களுடன், நெருக்கமாகச்

செயல்பட்டேன் என்றும், அதற்காக இலங்கையில் செயற்பாட்டுத் தளத்தை நிறுவ முயன்றேன் என்றும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் என்னைக் கைது செய்தார்கள். அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவினை பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெற்று சிறையில் தள்ளினார்கள். அதற்கு வலு சேர்க்கும் விதமாக கிளிநொச்சியில் வைத்து எனது நண்பர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். அவர் தங்கியிருந்த வீடு பிரபாகரனின் புதல்வர் சார்ல்ஸ் அண்டனி யுத்தகாலத்தில் தங் கியிருந்த வீடாம் . . . இவையெல்லாம் கைது

செய்தவர்களுக்கு வாய்ப்பாகப் போக, சிறைச்சாலை எனக்கு நீண்ட நிம்மதியையும் ஓய்வையும் தந்தது. நீதிமன்றை முழுமைமாக நம்பினேன், எல்லாவற்றையும் தைரியமாக எதிர்கொள்ளத் துணிந்தேன், கடைசியில் ஒரு கொலைக் குற்றச்சாட்டுடன் இன்னும் என் மீதான வழக்கு உயர்நீதிமன்றில் போய்க் கொண்டிருக்கிறது. சிறைச்சாலை அதிகாரிகளைப் பார்த்துச் சொன்னேன் ஒரு “பூனையைப் பிடித்து புலியென்று அடைத்து வைத்திருக்கிறார்கள்“ என்று. எல்லோரும் சிரித்தார்கள், அவர்களால் இன மத குல மொழி பேதம் கடந்து சிரிக்க மட்டுமே முடிந்தது. சரி இனி விசயத்திற்கு வருவோம்.

நிறைய வாசித்து மகிழ நீண்ட காலத்திற்குப் பின்னர் கிடைத்த நேரத்தை சரியாகப் பயன்படுத்துவதுதானே ஒரு போராளிக்கும் புத்திசாலிக்கும் அழகு. அதற்காக நான் ஒன்றும் புலி வீரனும் கிடையாது அதிபுத்திசாலியும் கிடையாது. எல்லாவற்றையும் மறந்து யானைக் கதை ஆட்டிலெறி தாக்குதல் களம் போலவும் மல்டி பெரல் அடி பெற்ற நிலம் போலவும் உள்ளம்

அதிர்ந்து மௌனிக்க,
எல்லாம் வெட்ட வெளியாகி பொட்டல் நிலமாகித் தெரிந்தது.

எல்லாச் சிந்தனைகளும் எண்ணங் களும் உணர்வுகளும் அமைதி கொண்டன. குருடன் யானை பார்க்கப் போனான். இது எப்படிச் சரியாகும். அவன் குருடன், எப்படி அவனால் யானை பார்க்க முடிந்தது? இது பிழையான விசயமல்லவோ, அப்படியிருக்க எல்லோரும் இதை குருடன் யானை பார் த் தான் என் றே எழுதுகின்றார்கள், சொல்கிறார்கள். சரி அதை, யானை பற்றி அறியப் போனார்கள் என்று நாம் மாற்றிக் கொள் வோம் . அல் லது இலகுவாக விளங் கிக் கொள்வதற்காக "பார்த்தல்" என்ற சொல் எடுத்தாளப்பட்டது என்று அதைப் பெரிது படுத்தாது விட்டுவிடுவோம்.

யானையைப் பற்றி ஸ்பரிசித்துச் சொன்ன எல்லாக் குருடர் களும் மடையர் களா? அல் லது விசயம் தெரியாதவர்களா?

குறைபுத்திக்காரர்களா?. எஸ்.பொவைப் போல “அது அவர்களின் தவறல்ல அதாவது சுவர் போல என்றதோ சுளகு போல என்றதோ துடைப்பம் போல என்றதோ, அது அவர்களின் ஸ்பரிசம். அவர்கள் விளங்கிக் கொண்ட விதம் அப்படி“ என்று மன்னித்துவிட என்னால் முடியவில்லை. மடையர்களின் கருத்தை மன்னித்து ஏற்றுக் கொள்ளலாமோ? மன்னிக்கலாம் ஆனால் எப்படி அதை ஏற்றுக் கொள்ள முடியும்?

யானை பற்றிய தேடல் செய்த குருடர்களில் ஒருவராவது புத்திசாலி இல்லையா? அல்லது ஒரு புத்திசாலிக் குருடன் கூட யானை “பார்க்கப்“ போகவில்லையா? எல்லாக் குருடனும் ஒரு பகுதியைத்தானா ஸ்பரிசிக்க வேண்டும். யானையின் காதைப் பிடித்தவன் சுளகு என்றான், செவியைப் பிடிக்கும் போது அதைத் தடவி உருவகப்படுத்திக் கொள்ளும் போது காதின் தொடர்ச்சியாக வரும் தலை,

தந்தம், தும்பிக்கை எதையும் அவன் தடவிப்

பார்க்க வில்லையா? சரி அவன்தான் அறிவில்லாதவன் மடையன். மற்றவன் கூட அந்தப் பெரிய யானையின் வாலை மட்டும்தானா ஸ்பரிசிக்க வேண்டும்? அதன் மேனியைத் தடவியவன் முன்னும் பின்னும் மேலும் கீழும் தடவ வாய்ப்பிருந்ததே அவனாலும் அதைச் செய்ய முடியாமற் போயிற்றா? ஆனாலும் ஒரு விடயம் புரிந்தது, யானைக் கதை பொதுவாக முழுமையாகச் செய்யப்படாத ஒரு விடயத்தை அரைகுறையாக விளக்கும் செயற்பாட்டிற்கு உதாரணமாக பயன்படுத்தப் படுகின்ற முழுமை பெறாத அவசரத்தில் எடுத்தாளப்பட்டவொன்று.

அப்போது யாரும் எதிர்க் கேள்வி கேட்காததால் பல முறைகளிலும் பிரயோகிக்கப்படலாயிற்று, இப்போதுள்ள நமது சட்டங்கள்போல. யானையை ஸ்பரிசித்தவர்கள் அறிவிழிகள் என்று ஒரே வசனத்தில் நிராகரித்தாலும் அதற்குள்ளால் நாம் ஏதோவொன்றை நியாயப்படுத்திக் கொள்கின்றோம். அதுதான் அவனது அறிவுமட்டம், அதனால் மன்னித்து விடுவோம், என்று நமக்கு நாமே

சமாதானம் செய்து கொள்கின்றோம். அறிவிலிகள் பார்த்த யானை கூட இப்படித்தான் இருக்கும் சுளகு போலவும் சுவர் போலவும். அதற்கு குருடன் பார்க்கத் தேவையில்லை. இந்தக் கதையில் குருடனைப் பார்க்க வைத்த பெருமை நமக்குத்தான் உண்டு,

மிக நீண்ட நாட்களுக்குப் பின்னர் எனது தம்பியொருவன் கேட்டான். அண்ணா உனக்கு குருடன் பார்த்த யானைக் கதை தெரியுமா? என்று. நான் ஆம் என்றேன். மீண்டும் அதே வேகத்தில் அவன் திருப்பிக் கேட்டான், குருடன் எப்படி பார்க்க முடியும்? என்று!.

என்னிடம் விளக்கக் குறிப்புகள் இல்லை போலியான வார்த்தைகளால் அவனின் நியாயமான கேள்வியை வலுவிழக்கச் செய்ய நான் தயாரில்லை. “அதுதானே குருடன் எப்படி பார்க்க முடியும்?” என்றேன். அவனுக்கோ ஏக திருப்தி. நான் கதை சொல்ல முன்னமே அவன் கதையை அறிந்திருக்கவும் கூடும் அல்லது

தலைப்பே அவனது சிந்தனையைக் கிளறிவிட்டிருக்கவும் கூடும். என்ற பல்வேறு எண்ணங்கள் எனக்குள் முகாமிட்டது. சிலவேளை அவனுக்கு கதையே தெரியாமல் இருக்கவும் கூடும், ஏதோ நான் உரையாடிக் கொண்டிருப்பது புத்தாயிரத்தில் பிறந்த ஒருவனுடன் அல்லவா என்னைவிட
அவனது அறிவு வீச்சு கனதியாய்த்தான் இருக்கும்.

இப்போது நானும் என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டும், நான் கைது செய்யப்பட்ட விசயமும் யானை. நிறையக் குருடர்கள், அவர்கள் பல வடிவங்களில் புலனாய்வுக்காரர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமைக் காவலர்கள், மனித உரிமைப் போராளிகள், போலிசார், அரசாங்கம், பொதுமக்கள், எல்லாவற்றையும்
தாண்டி எனது நண்பர்களும் உறவினர்களும், ஆகி தமது ஸ்பரிசத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள். என்னைக் குத்திக் கிழிப்பதில்தான் எத்தனை சுகம் அவர்களுக்கு.

சென்னைக்குப் போயிருந்த போது ஒரு நீண்ட உரையாடலுக்குப் பின்னர் மலர்மதி சொன்னார் "தம்பி கவனமாக
இரு உன்னை நான் விளாங்கிக் கொள்கின்றேன், நீ எங்கு போய் நிற்பாய் என்று விளாங்குகிறது, உனக்கு நீண்ட ஆயுள் கிடைக்க வேண்டும் நீ நிறையச் செய்ய வேண்டியிருக்கு, உன்னைச் சூழ நிறைய மாயக் கண்கள் இருக்கின்றன. அவற்றை நீ அடையாளம் காணமுடியாது.

அவற்றைக் கண்டு கொள்வது உனது புத்திசாலித்தனம்.
உனக்கு நான் என்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்வேன்".

அவுஸ்திரேலியாவிருந்து ஒருவர் வந்தார். அவரது பெயர் பிரோள் குரோசோவ். அவர் வந்தது வியாபார நிமித்தம்.
அவருடனான நீண்ட உரையாடலுக்குப் பின்னர் சொன்னார், 'சகோதரனே கவனமாக இரு காற்றைப் போல செயற்படு, காற்றின் அசைவை

உணர முடியும்
அடையாளத்தைக் காண முடியாது. உலகின் எல்லாவற்றையும்
யாரோ எங்கிருந்தோ தீர்மானிக்கிறார்கள்
அவர்களின் அனைத்திற்கும் நாம் அசைந்தாக
வேண்டும் என்றும் எதிர் பார்க்கிறார்கள்.
சர்வதேசம் என்பது என்னையும் உன்னையும்
ஒதுக்கிவிட்டு திட்டமிடவில்லை,
எனவேதான் கவனம் தேவை. வாழும்
காலம் பெறுமதியானது அதைக் கவனமாகப்
பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உனக்கு
என்னால் முடிந்த
அனைத்து உதவிகளையும் செய்வேன்'.

உலகின் இரண்டு துருவங்களில்
உள்ள மனிதர்கள் ஆனால் ஒரே சிந்தனை.
மொழி, இனம், சமயம் கடந்து நல்ல
உள்ளங்கள் எப்போதும் ஒரே மாதிரியாய்தான்
சிந்திக்கும். இப்போது எனக்கு எங்கிருந்தோ
பல்லாயிரம் பேரின் தைரியம் ஒருமித்து என்னில்
குடிகொண்டது போன்ற உணர்வு. எதைப் பற்றிய
பயமும் கொஞ்சம் கூட இல்லாத தன்மை, நான்
யார்? இந்த உலகில் எனது பணியென்ன?

எப்படிப்பட்ட ஒரு செயற்பாட்டுத் தளத்தை நான் தேர்ந்தெடுக்க வேண்டும்? எனது சிந்தணையை எப்படிக் கட்டமைக்க வேண்டும்? எப்படியான நபர்களை எனது இயங்கு

[illegible]

கொண்டே இருக்கின்றன.

மற்ற மனிதர்களைப் போல நான் ஒரு வரட்டுத் தளத்தில் நின்று கொண்டு எங்கெங்கோ இருந்து கிள்ளியெடுத்தவைகளைக் கோர்த்துக் கொண்டு அனுபவப்பட்டது மாதிரி கதை சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. அது போல யாரோ எழுதியவைகளைப் படித்துவிட்டு உணர்ச்சிவசப்பட்டு உந்தித்தள்ளப்பட்டு களத்தைத் துணியாது மடமையில் காரியமாற்றவும் தயாரில்லை. என்னைச் சூழ என்ன நடக்கிறது என்பதைத் தெளிவாகவே நான் புரிந்து கொள்கின்றேன். எனவே எனது செயற்பாட்டுத் தளத்தைத்

தீர்மானிப்பது ஒன்றும் கஷ்டமான காரியம் கிடையாது. சிறை வாழ்க்கை கற்றுத் தந்தவை மிக ஏறாளம். எனக்கு மிகவும் திருப்தியாய் ஒன்று புரிந்தது நான் மரணிக்கச் சித்தமாக இருக்க வேண்டும் அது வரைக்கும் நானும் எனது செயற்பாடுகளும் யானை, பார்ப்பவர்களைப் பற்றிக் கவலையில்லை அவர்கள் குருடர்கள்.

21.01.2012- 22.00 மணி